விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 07 சனிக்கிழமை (19.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 62




## இலட்சியப் போர் வெடிக்கும்

### சு.ப. தமிழ்ச்செல்வன் அரசுக்கு எச்சரிக்கை



(திருகோணமலை)

இலட்சியப் போராட்டம் மீண்டும் வெடிக்கும் இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அரசுக்கு கடுமையான எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழ்ச்செல்வன் நேற்று திருகோணமலை மூதூர்ப் பகுதியில் பொது அமைப்புப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு (12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சொல்ஹெய்ம் வருகிறார்!



(கொழும்பு)

நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நாளை மறுதினம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தனது விஜயத்தின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அரச பிரதிநிதிகள், அரசியல்கட்சிப் பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டு மூன்றாவது ஆண்டு நிறைவுபெறுவதைக் குறிக்கும் முகமாக கொழும்பில் எதிர்வரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அமைதி முயற்சியில் ஐ. நா. சபை தலையிடலாம்?

## அரசியல் அவதானிகள் ஊகம்

(கொழும்பு)

**இலங்கையின் அமைதி முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபை பாரிய பங்களிப்பை வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.**

(உ ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உயர்மட்டக் குழு கிளிநொச்சி திரும்பியது



(கிளிநொச்சி)

மட்டக்களப்பு அம்பாறை, திருமலை விஜயத்தை முடித்துக்கொண்டு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நேற்று பிற்பகல் கிளிநொச்சியை வந்தடைந்துள்ளனர். நேற்று பிற்பகல் 3.45 மணிக்கு விமானப்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மன்னார் செயலகம் நேற்று தாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் மன்னார் அரசியல்துறைக் காரியாலயம் மீண்டும் நேற்று அடித்து சேதப்படுத்தப்பட்டது.

மன்னார் சந்தைப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை காரி

அரசியல்துறைக் காரியாலயத்திற்கு அருகே பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கலகம் அடக்கும் பொலிசார் அக்கும்பலை கைது செய்தபோதும் விசாரணை எதுவும் மேற்கொள்ளாது விடுதலை செய்த

## யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டன பேரணிக்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

சியல்துறைக் காரியாலயம் மீண்டும் நேற்று அடித்து சேதப்படுத்தப்பட்டது.

மன்னார் சந்தைப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை காரியாலயத்திற்கு காலை 11 மணியளவில் பள்ளிமுனைப் பகுதியில் இருந்து சென்ற கும்பல் ஒன்று இச் செயலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கலகம் அடக்கும் பொலிசார் அக்கும்பலை கைது செய்தபோதும் விசாரணை எதுவும் மேற்கொள்ளாது விடுதலை செய்ததாக மன்னார் மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வன்முறைக் கும்பலின் இச் செயற்பாட்டினால் அரசியல்துறைக் காரியாலயம் பெருமளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்டன பேரணிக்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்ளாமை போன்ற செயற்பாடுகளைக் கண்டித்து எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை கடற்றொழிலாளர் சங்கங்களுடன் இணைந்து பொது அமைப்புக்கள் மேற்கொள்கின்றன.

பொலநறுவை மாவட்டம் புனானைப் பகுதியில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் நேற்றும் மாபெரும் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தொடர்ச்சியாக ஐந்தாவது நாளாக நேற்றும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெற்றது. இப் பேரணியை வலிகாமம் விவசாய சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.

மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட மூன்று போராளிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் சுனாமி நிவாரணம் வழங்கப்படுவதில் அரசு காட்டிவரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு எதிராக நேற்று முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள காத்தான்குடி முஸ்லிம்கள், அரசிற்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனர்த்தத்தின் பின்பு அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படவிருக்கும் கரையோர பாதுகாப்புத் திட்டம் தங்களது வாழ்வுரிமையை பறிப்பதாக தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

100 மீற்றர், 200 மீற்றர் பாதுகாப்பு வலயத்திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான மாற்றுத்திட்டங்கள் குறித்து அப் பகுதி மக்களுடன் பேசி முடிவெடுக்க வேண்டும். இன (12 ஆம் பக்கம் பார்க்க)

# செம்மணி புதைகுழி எலும்புக்கூடு வைத்திய அறிக்கை சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் புதைகுழியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பான சகல சட்ட ரீதியான வைத்திய அறிக்கைகளும் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிசார் கொழும்பு பிரதம நீதிவானிடம் நேற்று தெரிவித்தனர்.

ஆறு எலும்புக்கூடுகள் தொடர்பாக லண்டன் மத்திய லங்காஷியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வைத்தியர் வில்லியம் ஹகாட்டாவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளும் இதில் உள்ளடங்குகின்றன.

அத்துடன் 15 எலும்புக்கூடுகள் தொடர்பான வைத்திய அறிக்கைகளும் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிசார் கொழும்பு பிரதம நீதிவானிடம் தெரிவித்தனர். (04)

### கடற்படைக்கு அமெரிக்கா பயிற்சியா?

# "வுஹறிச்" இன்று வருகிறது!

(கொழும்பு)

அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஒன்று இன்று இலங்கை துறைமுகத்தை வந்தடையவுள்ளது. வுஹறிச் என பெயரிடப்பட்ட இந்தக் கப்பல் அமெரிக்கக் கடற்படையின் ஏழாவது படைத்தளபதியின் கீழ் உள்ள கடற்படைக் கப்பல் ஆகும்.

1971 ஆம் ஆண்டு முதல் பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இந்தக் கப்பலின் வருகை இலங்கை கடற்படையின் ஆழ்கடல் கண்காணிப்பு மற்றும் எதிர்ப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அவசர தேவைகள் குறித்து
# கொள்கையொன்றை ஏற்படுத்த அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

அவசர தேவைகள் குறித்து பொதுக்கொள்ஙகை ஒன்றினை ஏற்படுத்த அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

அதனை அரசியல் அமைப்புக்குள் இணைத்துக்கொள்ளவும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடிய அமைச்சரவை இந்த விடயங்களில் இணங்கபாடுகளை எட்டியுள்ளது.

இதனடிப்படையில், சுனாமி மற்றும் சூறாவளி உட்பட ஏனைய அனர்த்தங்களின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைகள், நியமங்கள் என்பனவும் அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்படவிருக்கின்றன.

மேலும், அரசாங்கம் தீர்மானித்துள்ள கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்துக்குள் கட்டடங்கள் அமைத்தலைத் தவிர்த்தல் தொடர்பான கொள்கையும் இதில் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-4)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட
# அரசாங்க ஊழியர்களுக்கு விசேட நிவாரணம் வழங்கப்படும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்குப் பொது நிவாரணங்களைவிட விசேட நிவாரணங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விசேட நிவாரணம் நானகு துறைகள் ஊடாக வழங்கப்படும் என பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நாள் முதல் இவ் அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளாகிக் கடமைக்கு சமுகமளிக்க முடியாமலுள்ள அரச ஊழியர்களுக்கு அந்தக் காலப் பகுதியை சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக வழங்குதல், பாதிக்கப்பட்ட வீடுகளுக்காகப் பெறப்பட்ட கடன்களை இரத்துச் செய்தல் என்பன இந்த நிவாரணங்களுக்குள் முக்கியமானவையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட, வீட்டு உபயோகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும், வீடுகளைப் புனரமைப்பதற்கும் ஓராண்டு சம்பள முற்பணமும் வழங்கப்படவுள்ளது.

இந்த நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள் பாதிப்புக்களை உறுதி செய்ய வேண்டும், அவ்வாறு உறுதி செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கான நிவாரணங்கள் துரிதமாக வழங்கப்படும் என்று அமைச்சர் அமரசிறி தொடங்கொட மேலும் அறிவித்துள்ளார். (ற-4)

## சாவகச்சேரி மக்களின் நலன் கருதி
# வாரிவனநாதர் கோயிலடியில் நவீன கலாசார மண்டபம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கான நவீனத்துவ்மிக்க புதிய கலாசார மண்டபம் ஒன்று சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் கோவிலுக்கு அருகில் 5 மில்லியன் ரூபா செலவில் இவ்வருடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவ் விடத்தில் தென்மராட்சி கலைமன்றத்தினால் பலவருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மேடையும் அறையும் இருப்பதால், உத்தேசிக்கப்பட்டுள்ள நவீனத்துவமிக்க கலாசார மண்டபத்தினை அதனுடன் இணைத்து நிர்மாணிக்கவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதேவேளை, யாழ்.மாவட்ட அரச செயலகத்தினால் சாவகச்சேரி பிரதேச சபையின் பொது நூலகம் 1.5 மில்லியன் ரூபா செலவிலும் சுடரொளி சனசமூக நிலையம் 5 மில்லியன் ரூபா செலவிலும் இவ்வருடம் புனரமைபபுச் செய்யப்படும் என்று அரச செயலக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (ப-16)

# பிரான்ஸ் அரசின் நிதி உதவியின் கீழ் 14 பொது மண்டபங்கள் அமைப்பு

(தென்மராட்சி)

பிரான்ஸ் குடியரசின் 46 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்திலுள்ள கியூ, டெக் நிறுவனம் கருத்தாயின் அனுசரணையோடு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 பொது நோக்கு மண்டபங்களை புதிதாகவும், புனரமைத்தும் நிறைவேற்றியுள்ளன.

இவற்றில் உடுவில் பிரதேசத்திலுள்ள கண்ணகி குடியிருப்பு, பெரிய மதவடி சபஸ்திப்பிள்ளை ஆகிய நலன்புரி நிலையங்களிலும் சங்கானைப் பிரதேசத்தில் பாணா வெட்டி, கப்பண்டா, நிதவான் ஆகிய நலன்புரி நிலையங்களிலும், பருத்தித்துறைப் பிரதேசத்தில் புனிதநகர், குடத்தனை ஆகிய நலன்புரி நிலையங்களிலும், தெல்லிப்பழை ஊறணி நலன்புரி நிலையத்திலுமாக மொததம் ஒன்பது நலன்புரி நிலையங்களிலும் இத்தகைய பொது நோக்கு மண்டபங்கள ஒவ்வொன்றும் தலா நான்கு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சாவகச்சேரி பிரதேசத்தில் சரசாலை, கைதடி, மறவன்புலோ, கொடிகாமம் பகுதியிலும் மற்றும் காட்டுப்புலம் பகுதியில் தலா இரணடு இலட்சம் செலவில் ஐந்து பொது நோக்கு மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது. (ப-16)

# இராசி பலன்

**19.02.2005**
**(மாசி 7 சனிக்கிழமை)**
**ஏகாதசி பின்னிரவு 03.45 மணிவரை**
**திருவாதிரை பின்னிரவு 04.52 மணி வரை**
**இராகுகாலம் 09.32 -11.02 மணிவரை**
**சுபநேரம் 03.32 - 05.02 மணிவரை**
**பீம ஏகாதசி விரதம்**

**மேடம்** பிரயாண நன்மை, காரிய அனுகூலம், கூட்டு முயற்சி, தெய்வ தரிசனம்.

**இடபம்** கௌரவக்குறைவு, விவாதம், போசன சுகக் குறைவு, பண விரயம்.

**மிதுனம்** வெகுமானம், மாதர்நட்பு, நல்ல முயற்சி, சயன சுகம்.

**கடகம்** சோம்பல் நிலை, சிந்தனை மிகுதி, தனவிரயம், பிறருக்கு உதவுதல்.

**சிங்கம்** தடைப்பட்ட காரியம்கைகூடும், போசன சுகம், உறவினர் வருகை, பணவருவாய்.

**கன்னி** எடுத்த காரியம் கைகூடும், நன்கொடை, நல்ல மரியாதை, போசன சுகம்.

**துலாம்** எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை, வீண்பயம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்** ஆரோக்கியக் குறைவு, மனக் கவலை, பொருள் விரயம், தொழில் சிந்தை.

**தனுசு** மனோ தைரியம், சயன சுகம், விருந்துபசாரம், நண்பர்கள் உதவி.

**மகரம்** சத்துருஜெயம், தொழில் சிந்தை, நண்பர் கள் உதவி, காரிய அனுகூலம்.

**கும்பம்** அஜீரண ரோகம், காரிய இடையூறு, அமைதிக் குறைவு, பண விரயம்.

**மீனம்** தன விரயம், வேலையில் ஆர்வம், முயற்சி தாமதம், மாதா சுகம்.

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது
- வளவன்

# ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்குவிப்புத் திட்டம்

(கொழும்பு)

சிறு ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்கென இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஒரு பில்லியன் ரூபா பெறுமதிமிக்க ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

2004 ஆம் ஆண்டின் ஏற்றுமதி விற்பனையளவு மற்றும் 2001 ஆம் 2003 ஆம் ஆண்டுகளின் அடிப்படைச் சராசரியளவு என்பனவற்றில் இருந்து ஊக்குவிப்புக்கு சிறு ஏற்றுமதியாளர்கள் இனம் காணப்படுகிறார்கள் என்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

# அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படுவதில் பாரபட்சம்

சகல அரச ஊழியர்களுக்குமென அறிவிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவு 5 மாகாண சேவைகளைச் சேர்ந்த சுகாதார ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லையென சுகாதார சேவை ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.

ம்த்திய அரசினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை மீறும் வகையில் இந்த நடவடிக்கை இடம்பெறுவதாக சம்மேளனத்தின் பிரதான செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பள உயர்வானது மத்திய அரசின் கீழ் பணிபுரியும் சுகாதார ஊழியர்களுக்கு வழங்குவதறகுரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

5 மாகாண சபைகளைச் சேர்ந்த சுகாதார ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படாததன் காரணமாக அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஆயினும் மேல், ஊவா, மத்திய மாகாண சுகாதார ஊழியர்க்ளுக்கு இந்தச் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பள அதிகரிப்பை உடனடியாக வழங்குமாறு தாம் 5 மாகாணங்களின் சுகாதார அமைச்சுக்களுக்கும் அறிவுறுத்தியிருப்பதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் நிகால் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தல் நேற்றுமுன்தினம் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-9)

# வரவேற்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் 2004/2005 ஆம் ஆண்டு புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வின் போது புதிய மாணவர்களுக்கு எவ்விதமான பகிடிவதைகளும் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-95)

# கட்டட நிர்மாணத்திற்கான அரசின் எல்லைத் திட்டம் சட்டபூர்வமற்றது
## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



(கொழும்பு)

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் கட்டடங்களை நிர்மாணிக்கும் அரசாங்கத்தின் திட்டம் சட்டபூர்வமற்றது என ஐக்கியதேசியக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தெளிவான கொள்கைத்திட்டம் எதனையும் கொணடிருக்கவில்லை.

மக்கள் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் பகுதிக்குள் வீடுகளை அமைப்பதைத் தடுப்பதற்கு சட்ட அங்கீகாரம் பெறப்படவில்லை.

எனவே, பொதுமக்கள் மீளவும் தமது குடியிருப்புக்களை அந்தப் பகுதிகளில் அமைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# மாடிக் கட்டடம்

(பொன்னாலை)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இருமாடிகள் கொண்ட வகுப்பறைக் கட்டடம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக்கட்டட நிர்மாணத்திற்கான நிதியினை சுவிஸ் அபிவிருத்திச் சபையினர் வழங்கவுள்ளனர்.

இக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம அண்மையில இடம்பெற்றது. (ப-49)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சி.வித்தியாதரனின் 'சதுரங்கத்தில் இறுதியாட்டம்' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்விமான்கள் பலரும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு நடைபெறவிருந்தது தவிர்க்கமுடியா காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# அரசாங்கம் சர்வதேச உதவிகளை முடக்கி

# இராணுவ வளங்களைப் பெருக்கி வருகின்றது

## புங்குடுதீவு பொது அமைப்புகள் ஒன்றியம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**போரினால் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களைத் திட்டமிட்டு சிறிலங்கா அரசு தனது கொலைவெறி பிடித்த சிங்களப்படைகள் மூலம் சின்னாபின்னப்படுத்தி நிர்மூலம் செய்தது. இதன்மூலம் தமிழ்மக்கள் நிர்க்கதி நிலையில் தமது சொந்த வாழ்விடங்களை இழந்து, உறவுகளை இழந்து, சொத்துக்களை இழந்து ஏதிலிகளாக இருந்தவேளையில் தமிழ்மக்களுக்கு சிங்கள அரசுகள் எவ்வித உதவிகளையும் வழங்காது பாரபட்சம் காட்டி வந்ததுடன், சர்வதேச நாடுகள் வழங்கிய நிதி உதவியினைக் கொண்டு இராணுவத் தளபாடங்களை வாங்கிக் குவித்தும் சிங்களப்பகுதியையே முழுவீச்சில் அபிவிருத்தி செய்தும் வருகின்றது.**

இவ்வாறு புங்குடுதீவு பொது அமைப்புகள் ஒன்றியம் தெரிவித்திருக்கிறது. இதுகுறித்து அவ் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து மாறிமாறி வந்த சிங்கள ஆட்சியாளர்கள் வடக்கு - கிழக்கு தமிழா தாயகப் பிரதேசங்களில் வாழும் .தமிழ் மக்களைப் புறக்கணித்தும், பாரபட்சத்துடனும் நடத்திவந்ததுடன் காலத்திற்குக் காலம் சிங்களக் காடையர்களையும், சிங்கள அரசபடைகளையும் தமிழமக்கள மீது ஏவி தமிழ் மக்களைக் கொன்றொழித்தும், தமிழர் சொத்துக்களைச் சூறையாடியும், தமிழ் மக்களுக்கு சொல்லொணாத் துன்பங்களையும், துயரத்தையும் விளைவித்துவந்தமை தாங்கள் மட்டுமல்ல சர்வதேசமும் அறிந்ததே!

இந்நிலையில் இருந்து விடுபட்டு சொந்த மண்ணில் சுயகௌரவத்துடனும், சுயநிர்ணய உரிமையுடனும் நிம்மதியாக தமிழ்மக்கள் வாழ்வதற்கு ஆயுதம் தூக்கிப் போராடுவதைத் தவிர வேறுவழியில்லாமல் இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக எம் தேசியத்தலைவர் அதிமேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தமிழீழப் போரை நடாத்திவந்த வேளையில் சர்வதேச நாடுகளின வேண்டுதலுக்கு அமைய விடுதலைப்போரை நிறுத்தி சமாதான உடன்படிக்கைக்கு தேசியத்தலைவர் அவர்கள் முன்வந்து 2002.02.22ஆந திகதி தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களும், இலங்கை அரசாங்கமும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டு அவர்கள் நிர்க்கதி நிலையில் இருந்தும், இழப்புக்களில் இருந்தும் மீள்வதற்கு முன்னர் "சுனாமி" கடற்கொந்தளிப்பால் வடக்கு -கிழக்கு தமிழர் தாயகக் கரையோர கிராமங்கள் பல அழிக்கப்பட்டன. இவ்வேளை தமிழ் மக்களின் பாதுகாவலர்களான தமிழீழ விடுதலைப்புலிகள் விரைந்து செயற்பட்டு உடனடி மீட்புப்பணியினையும், அவசர மனிதாபிமானப் பணியினையும், நிவாரணப பணிகளையும் மேற்கொணடிருந்தமையை தாங்களும், சர்வதேசமுமே வியந்து பாராட்டியிருந்தமையை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

இந்நிலையில் சிறிலங்கா அரசோ பாராமுகமாக நடந்துகொண்டதுடன், சர்வதேச நாடுகள் வழங்கிய நிவாரண உதவிகள் சுனாமியினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு தாயகப் பிரதேச மக்களுக்கு மிகச் சொற்பமாகவே வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து இரவு பகலாக மக்களோடு மக்களாக நின்று அரும்பெரும் பணியாற்றிவந்த மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு உட்பட அறுவரை ஈவிரக்கமற்ற முறையில் காட்டுமிராண்டித்தனமாகத் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டதை நாம் மிகவும் வன்மையாகக கண்டிக்கிறோம்.

யுத்தநிறுதத காலம் தொடக்கம் இன்றுவரை பல போராளிகளை சிறிலங்கா அரசபடைகளும், தேசவிரோத சக்திகளும் இணைந்து கடலிலும், தரையிலும் படுகொலை செய்துவந்த போதிலும் தேசியத் தலைவரும், அவர் வழிநிற்கும் போராளிகளும், தமிழ் மக்களாகிய நாமும் பொறுமையுடனும், நிதானத்துடனும் சமாதான வழியில் எம் உரிமையைப் பெறுவதற்காக அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் சகித்து வந்துள்ளோம்.

கௌசல்யன் அவர்களின் படுகொலைக்குப் பின்னர் பொறுமையிழந்து நிற்கும் தமிழ்மக்களாகிய நாம் தங்களையும், சர்வதேச நாடுகளையும் கேட்டுக்கொள்வது தமிழர் பிரதிநிதிகளான விடுதலைபபுலிகளைப் படுகொலை செய்வதை நிறுத்தவேண்டும் என்பதும் இப்படுகொலையைப் புரிந்தவர்களை இனங்கணடு நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோருவதுடன் இவ்வாறான செயல்களை நாம் தொடர்ந்து அனுமதிக்க முடியாதென்பதையும், இச்செயல்களைப் புரிபவர்களுக்கெதிராகவும் எம் தாயகத்தை மீட்பதற்காகவும போராடுவதைத் தவிர வேறு வழியெதுவும் தமிழ்மக்களாகிய எமக்கு இல்லை எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## வெளியீட்டு விழா

(கொழும்புத்துறை)

நல்லூர் புனித யாக்கோபு ஆலய 175வது ஆண்டு நினைவு மலர் வெளியீட்டுவிழா இன்று மாலை 4.00மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆசியுரையினை பங்குத்தந்தை அருட்பணி அ.ஸ்ரீபனும், நயப்புரையினை பளை கோட்டக் கல்வி அதிகாரி சி.இராமலிங்கமும், மதிப்பீட்டு உரையினை யாழ்.பல்கலைக்கழக பகுதிநேர விரிவுரையாளர் எம்.வித்தியானந்தநேசனும் நிகழ்த்துவர். (ப-51)

## கண்காட்சி

(பொன்னாலை)

வலிமேற்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட தையல் மனையியல் டிப்ளோமா பயிற்சிநெறித் திட்டத்தின் கீழ் பயிற்சிபெற்ற மாணவர்களின் வினை பொருட்களை உளளடக்கிய கண்காட்சி ஒன்று வரும் 28ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 1ஆம் திகதி வரை தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ப-49)

## ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து கொள்வார். கௌரவ விருநதினர்களாக பாராளுமன்ற உறுபபினர் பத்மினி சிதம்பரநாதனும், மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினியும், சிறப்பு விருந்தினராக கால்நடை வைத்தியர் வ.அமிர்தலிங்கமும் கலந்துகொள்வார்கள். (ப-51)


# நீங்காத நினைவில் மூன்று ஆண்டுகள்

வேலணை மேற்கு

உயர்திரு.

**வாதவூர் தவச்செல்வம்(J.P.)**

(உரிமையாளர், சாயிராம் கட்டட ஒப்பந்தகாரர், சாயிராம் தொலைத் தொடர்பகம் - வேலணை)



அப்பா !

எங்களுக்கு இந்நிலை வரும் என்று
எள்ளளவும் எண்ணவில்லை!
சாவு உங்களை நெருங்கும் என்று
சற்றும் நாம் நினைக்கவில்லை!
தெய்வமாக நின்று எம்மை
நீங்கள்தான் வழிநடத்த வேண்டும் அப்பா!

ஆத்மா சாந்தியடைய பெருங்குளம்
அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
-குடும்பத்தினர்
74/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தோற்றம்
1943.12.15

மறைவு
2002.02.07

(C/1088)

# இலங்கை அரசின் இனவாத நடவடிக்கைகளுக்கு கண்காணிப்புக்குழு நியாயம் கற்பித்து வருகிறது

## யாழ்.மாவட்ட கல்விசார் அமைப்புக்கள் கடும் விசனம்

போர்நிறுத்தக் காலத்தில் எத்தனை போர்நிறுத்த மீறல்கள் இடம்பெற்றபோதும், கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகள் திருப்திகரமாக அமையவில்லை.

இது உண்மையில் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகள் அரசின் நடவடிக்கைக்கு துணைபோவதாகவும் அரசினுடைய நடவடிக்கைக்கு நியாயம் கற்பிப்பதாகவும் அரசின் பொய்த்தோற்றத்தினை மறைப்பதற்காகவும் தான் அமைந்திருக்கின்றது.

இவ்வாறு தமது விசனங்களைத் தெரிவிக்கும் மகஜர்களை கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு,

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

மனிதாபிமானப் பணிகளில் நிராயுதபாணிகளாக ஈடுபட்டிருந்த மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு விடுதலைப் புலிகளும், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவும் திட்டமிட்ட வகையில் இலங்கை இராணுவத்தினால் அரங்கேற்றிய படுகொலைச் சம்பவத்தினால் தமிழர்கள் எல்லோரும் கொதிப்படைந்த நிலையில் இருக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், தமிழ்த் தேசியத்தினுடைய ஒருமைப்பாட்டினை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒரு போராளியுமான லெப்.கேணல் கௌசல்யனின் இழப்பானது, அனைத்து தமிழ் பேசும் மக்களையும் சோகக்கடலில் மிதக்க வைத்துள்ளது.

வடக்கு கிழக்கினைத் துண்டாட கருணா என்ற தேசத்துரோகியைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் தமது அரசியல் வியூகங்களை அமைத்துக்கொண்டிருந்தவேளை, அரசினுடைய கபட அரசியல் நாடகத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க தியாக உணர்வோடு, செயற்பட்ட போராளியை இன்று நாம் இழந்து நிற்கின்றோம்.

போர்நிறுத்தக் காலமானது மூன்றாவது ஆண்டையும் நிறைவுசெய்யும் நிலையில் உள்ள வேளையில், சிங்கள அரசாங்கத்தினால் இந்தப்போர் ஓய்ந்த அமைதியான சூழலைக் குழப்பி, தமது அரசியல் லாபத்தினை பல்மடங்காக்க மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சிதான் இ.கௌசல்யன் உட்பட போராளிகள் மீதான தாக்குதல் ஆகும்.

இதனைக்கூட மூடிமறைத்து, இருட்டடிப்புச்செய்யவே இலங்கை அரசதரப்பு முயற்சி செய்கின்றது.

இந்தப் போர்நிறுத்தக் காலத்தில் எத்தனை போர்நிறுத்த மீறல்கள் இடம்பெற்ற போதும், கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் என்ன இடம்பெற்றுள்ளது? உண்மையில் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகள் அரசின் நடவடிக்கைக்குத் துணை போவதாகவும், அரசினுடைய நடவடிக்கைக்கு நியாயம் கற்பிப்பதாகவும், அரசின் பொய்தோற்றத்தினை மறைப்பதாகவும் தான் அமைந்திருக்கின்றது.

ஏனென்றால் இவ்வளவு போர்நிறுத்தமீறல்கள் இடம்பெற்றபோதும் மௌனம் சாதிப்பதன் அர்த்தம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பக்கச்சார்பான போக்காகவே அமைகின்றது என்று தமிழ் மக்களின் மனதில் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஆனால் தமிழ் மக்கள் ஒன்றில் மட்டும் தெளிவானநிலையில் இருக்கின்றார்கள். தமிழர்களுக்கென்று, சுயநிர்ணய உரிமையுடன்கூடிய மரபுவழித் தாயகத்தினைச் சிங்களதேசம் ஒருபோதும் தருவதற்கு முன்வரப்போவதில்லை என்பதிலும், எமது உரிமையை, எமது தனித்துவமான, எமது தாயகத்தினை நாமே நிர்ணயிக்கவேண்டிவரும் என்பதிலும், எமது தேசியத் தலைவரின் காலத்தில், எமது தேசியத்தலைவரின் கரங்களை பலப்படுத்துவதன் ஊடாகத்தான் எமக்கென்று நிரந்தர விடியலை ஏற்படுத்தலாம் என்பதிலும் தமிழ் மக்கள் தெளிவான நிலைப்பாட்டுடன் இருக் கின்றார்கள்.

எனவே சிங்களப் பேரினவாத அரசாங்கத்திற்கு ஆழமாக நாம் கூறவிரும்புவது, மேலும்மேலும் இவ்வாறான திட்டமிட்ட வகையில் படுகொலைகளை முன்னெடுப்பீர்கள் என்றால், ஒட்டுமொத்த தமிழர்களும் பெருமெடுப்பிலான மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து எமது தேசத்தின் விடுதலைக்கான பாதையை நாமே நிர்ணயிக்க வேண்டியநிலை ஏற்படும் என்பதைக் குறிப்பிடுகின்றோம்.



### தொழில்நுட்பக் கல்லூரி

எமது மக்கள் மத்தியில் சமாதானம் பற்றிய நம்பிக்கையின்மை' தோன்றியுள்ளதோடு எதிர்கால வாழ்வியல் பற்றிய அச்சப்பாடும் போரியல் குறித்த எண்ணப்பாடுமே மேலோங்கி வருகிறது. சமாதான காலத்தில் அரசு செய்கின்ற நிழல் யுத்தங்களால் தமிழ்மக்கள் சோர்வடைந்துள்ளனர்.

நீண்டகால வரலாற்றில் எமது மக்கள் தரிசித்து கொடூர யுத்தத்தை மட்டுமல்ல சமாதான ஒப்பந்தங்களையும் தான் காலங்காலமாக் நடைபெறும் யுத்த முஸ்தீபுகளுக்கு முகம்கொடுத்து களைத்துப்போகையில் உற்சாகத்தை ஊட்டியபடி சமாதான ஒப்பந்தங்கள் ஓடிவரும். பின்னர் அவை ஓய்ந்துபோகும். மீண்டுமொரு யுத்த களம் சிருஷ்டிக்கப்படும். சமாதான ஆரம்பத்திற்கும் மீண்டுமொரு யுத்தஆரம் பத்திற்குமிடையேயான கால இடைவெளியில் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட வாழ்வியல் நம்பிக்கைகளும், அமைதி மூச்சையும் உடைத்து சின்னாபின்னமாக் கியபடியே யுத்தம் பூதாகரமானதாய்த் தோன்றும். இது வரலாற்றியல் உண்மை.

இம்முறை கைச்சாத்திடப்பட்டுள்ள சமாதான ஒப்பந்தம் முன்னைய ஒப்பந்தங்களை விட மக்கள் மத்தியில் அதிகமான நம்பிக்கை உறுதியை ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில் முன்னைய காலங்களைப் போலன்றி தமிழ்மக்களின் போராட்ட நியாயப்பாடுகளையும் வாழ்வியல் அவலங்களையும் சர்வதேசம் வரை அறியப்பட்டதோடு, அதன் ஆதரவும் அழுத்தங்களுமே இன்றைய சமாதானத்தின் அத்திபாரங்களாய் அமைந்தன.

காலங்காலமாகத் தமிழ் மக்கள் மீது ஆளும்வர்க்கம் செய்துவந்த கொடுமைகளும், கொடூரங்களும் மறைவிலிருந்து அம்பலத்திற்கு அரங்கேறியுள்ளமையால் அரசு தன்னை சமாதான அரங்கிற்கு இட்டுச் சென்றுள்ளதேதவிர தனது வழமையான செயற்பாடுகளில் இருந்து விடுபடவில்லை. சமாதானப் பிரியமுள்ளதாயும் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்குக் கட்டுப்பட்டதாயும் அரசு தன்னை அடையாளப்படுத்த முனைகின்றதே தவிர தமிழ் மக்களின் உரிமைகள், இயல்புவாழ்க்கை என்பவற்றில் அக்கறைகொள்ளவில்லை. மாறாக "இயல்புநிலைச் சீர்குலைப்பு" நடவடிக்கைகளாக நிழல்யுத்தங்களை மேற்கொண்டுவருகின்றது.

இன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு சர்வதேசம் அள்ளி வழங்குகின்ற உதவிகளைக்கூட வடகிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட விரும்பாதநிலையில் வடகிழக்குத் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் அடிப்படை வாழ்வியல் வசதிகள் மீதான அரசின் பாராமுகப் போக்கினால் பாதிக்கப்பட்ட மக்கள் மனவியல் ரீதியில் விரக்தியடைந்துள்ளனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் தம்மால் இயலுமானவரையில் பாதிக்கப்பட்ட மக்களை வழமையான வாழ் நிலைக்கு இட்டுச்செல்லும் பணிகளில் செயல்பட்டு வருகின்றனர். இந்நிலையில் மனிதாபிமானப் பணிகளை மேற் கொண்டு வந்த மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட போராளிகளும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேருவும் படுகொலை செய்யப்பட்டமை தமிழ்மக்கள் மத்தியில் மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. சமாதான காலத்தில் இயற்கை அழிவினால் மக்கள் பேரவலங்களிற்குட்பட்டநிலையில், அரசின் திட்டமிட்ட நிழல் யுத்தங்களால் தமிழ் மக்கள் மீது ஏற்பட்டிருந்த சமாதானம் பற்றிய நம்பிக்கை உறுதி குன்றிப் போகிறது. மாறாக போரியல் எண்ணப்பாடுகள் இடம்பிடிக்கத் தொடங்குகின்றது. எனவே மக்களை இந்நிலையில் இருந்து மீட்டு மீண்டும் சமாதான நம்பிக்கை உறுதியை கட்டியெழுப்பச் சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும்.

இலங்கை அரசின் இத்தகைய படுகொலைகளை நிறுத்துவதற்கு தங்களால் ஆன நடவடிக்கைகளை அரசு மீது எடுக்கவேண்டும். இந்தச் சமாதானத்தின் அத்திபாரங்களை அமைத்த நீங்களே அதனைக் கட்டியெழுப்பி தமிழ் மக்களிற்கான நல்ல தீர்வையும் சுபீட்சகரமான எதிர்காலத்தையும் பெற்றுத்தரவேண்டும் என அவாவி நிற்கின்றோம்.

### கல்விமேம்பாட்டுப் பேரவை

சமாதானத்திற்கும், அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் கண்மூடித்தனமான படுகொலைகளை யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப்பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது. அம்பாறை - மட்டக்களப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.டபிள்யூ அரியநாயகம் சந்திரநேரு உட்பட ஆறு தமிழர்கள் புனானைப் பகுதியில் திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

ஊடகத் தகவல்களிலிருந்தும், படுகொலைகளிலிருந்து தப்பியவர்களின் வாக்குமூலங்களிலிருந்தும் கொலையாளிகள் கௌசல்யன் உட்பட அனைவரையும் உற்றுநோக்கி வேட்டுகளைத் தீர்த்து இரக்கமற்ற இந்த ஈனக்கொலைகளைச் செய்திருக்கின்றார்கள் சம்பவம் நடைபெற்ற இடத திற்கு மிக அண்மையில் வெலிகந்தை, புனானை இராணுவ முகாம்கள் அமைந்திருந்தும் ஆயுதம்தாங்கிய கொலையாளிகள் சுதந்திரமாகச் செயற்பட்டிருக்கின்றார்கள். கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கருத்திற்கொண்டு சிந்திக்கும்போது, அரசபடைகளின் அனுசரணை கிடைத்துள்ளதாக கருத முடிகிறது. அரச படைகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேநசத்தினுள் பொறுப்பற்று நடந்துள்ளன என்றே கருதுகின்றோம்.

இந்நாட்டில் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக காலத்துக்குக்காலம் இனவாதப் படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன. அப்போதெல்லாம் மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரச பாதுகாப்புப்படைகள் மௌனித்துப் பார்த்துக்கொண் டிருந்ததும், பல இடங்களில், இதற்குமப்பால் படையினரும் இனவெறித் தாக்குதலில் நேரடியாக சம்பந்தப்பட்டும் இருந்துள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களின் உயிர்களை இனப்படுகொலைகளும், யுத்தமும் காவுகொண்ட பின்னர் சமாதானச் சூழல் வந்த பின்பும், அதனைச் சீர்குலைக்க, வெவ்வேறு காலங்களில் அரச படைகளும், பேரினவாதக் கும்பல்களும் விடுதலைப்புலிகளை மிகமோசமாகச் சீண்டினர். அயினும் நாட்டின் நலன்கருதி விடுதலைப் புலிகள் பொறுமைகாத்தனர். இடையில் சுனாமி பேரலைகள் பல்லாயிரம் தமிழ் மக்களின் உயிர்களைக் காவுகொண்டது. தமிழர் தாயகத்தைச் சிதைத்துச்சீரழித்தது.

பேரழிவு நிவாரணம், புனரமைப்பு என்ற உத்வேகத்துடன் இன,மத,பேதம் பார்க்காமல் அல்லும்பகலும் அயராது பணிசெய்த, அம்பாறை மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அவர்கள் தமிழ் முஸ்லிம் மக்களின் மனங்களில் நிறைந்து நின்றார். இவர் படுகொலை செய்யப்பட்டதன் மூலம் புலிகளின் பொறுமை சோதிக்கப்படுகின்றது. அமைதி கேள்விக்குறியாக உள்ளது.

இதேபோல சத்திய விரதப் போராட்டங்களை தமிழ்மக்களின் உரிமைக்காக நடாத்திய இ.பிள்யூ அரியநாயகம் அவர்களது மகனான மனிதநேய செயற்பாடுகளுக்காக அரும்பணியாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அவர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

இக்கொலைகளை எவராலும் நியாயப்படுத்தமுடியாது. இத்தகைய படுகொலைகள் மேலும் நடவாதிருக்கவும், நாடு சமாதானத்தை நோக்கிச் செல்லவும் உடன் விரைந்து நடவடிக்கைகள் எடுக்குமாறு வேண்டுவதுடன் இப்படுகொலைகளைக் கல்வி உலகின் சார்பாக யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

### தமிழ் மாணவர் ஒன்றியம்

மட்டு அம்பாறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளினதும் மாமனிதர் சந்திர நேருவினதும் படுகொலை சிறிலங்கா இராணுவத்தின் திட்டமிட்டசெயலே என்பதை நாம் தெளிவாகவும் உறுதியாகவும் கூறவிரும்புகிறோம். இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் பணிக்காகச் செல்லும்போது முன்னறிவித்தல் வழங்கவேண்டும் என்பது புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்படவில்லை.

இதன்படியே விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் தமது அரசியல் பணிகளைக் காலங்காலமாக ஆற்றிவருகின்றனர். சம்பவ தினத்தன்று லெப்.கேணல் கௌசல்யன் குழுவினர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் செல்லும்போது ஓமந்தை இராணுவச் சாவடியில் பதிவுசெய்தமை மூலம் அவர்களின் வருகை உறுதிசெய்யப் பட்டே இக்கொலை வெறியாட்டம் மேற் கொள்ளப்பட்டது என்பது தெளிவாகப் புலனாகின்றது.

சிறிலங்கா இராணுவத்தின் இச் செயலுக்கு நாம் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். யுத்தநிறுத்தகாலத்தில் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இப்படுகொலையானது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான நடவடிக்கைகளையும் முழுமையாகப் பாதிக்கும் என்பதையும் கூறவிரும்புகின்றோம். இச்சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என இராணுவத்தரப்பு கூறுவது நகைப்பிற்கிடமானது. இச்சம்பவமானது சிறிலங்கா இராணுவத்தின் காவலரண்களிற்கு இடையே உள்ள பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. எனவே இராணுவத்தின் ஒத்துழைப்பின்றி ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடாத்தியிருக்கமுடியாது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம்செய்த காலத்தில் இருந்து சிறிலங்கா இராணுவமானது மாறிமாறிப் புலிகள்மீது தாக்குதல் நடாத்தி வருகின்றது. இவ்வாறான யுத்தநிறுத்த மீறல்களானது பொறுமையின் எல்லையில் நிற்கும் புலிகளை வலிந்து யுத்தத்திற்கு இழுக்கும் நடவடிக்கைகளாகவே நாம் கருதுகின்றோம். எனவே நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபடும் புலி உறுப்பினர்கள் மீது நடாத்தப்படும் கோழைத்தனமான தாக்குதல்களைச் சிறிலங்கா இராணுவமானது உடன்நிறுத்தவேண்டும் இத்தகைய தாக்குதல்கள் தொடருமாயின் தமிழ் மக்கள் பொறுமைகாக்கமுடியாது. ஆகவே நாம் எமது உரிமையைப் பெறுவதற்காக போராடவேண்டிய சூழ்நிலை உருவாகலாம். எனவே யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் சிறிலங்கா இராணுவத்தின் இப்படுகொலைகளைப் பூரண விசாரணைசெய்து உண்மையை உடனடியாக மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளியிடுவதுடன் இவ்வாறான சிறிலங்கா அரசின் யுத்தநிறுத்தமீறல்களிற்கு தடைவிதிக்கவேண்டுமென தமிழ்பேசும் மாணவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம். (ப-19)

## இன்று ஒரு தகவல்

# பிறவியின் பெருநோக்கம்

ஒரு பெண்மணி தனது கணவனைப்பற்றி நிறையக் குறைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு பெரியவரிடம் போய் முறையிட்டார். அவர் இவரை அழைத்து உட்காரவைத்து "சரி! அவரைப் பற்றிய குறைகளைச் சொல்கிறீர்களே இன்று அவர் செய்த நன்மைகளைச் சொல்லுங்கள்" என்று கேட்டிருக்கிறார். அவர் கணவர் செய்த நல்ல காரியங்களை ஒவ்வொன்றாக நினைவுபடுத்திச் சொல்லியிருக்கிறார்.

"ஏனம்மா! இவ்வளவு நன்மைகளை அவர் செய்திருக்கிறார் உனக்கு என்ன குறை?" என்று கேட்டார் பெரியவர். என்னைப் பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டுவதில்லை அலட்சியமாக நினைக்கிறார். அதுதான் குறையாகவே தெரிகிறது என்றார் இவர். "சரி! இனிமேல் நீங்கள் அவரால் அடைந்த இனி அடையக் கூடிய நன்மைகளை மட்டும் நினைத்துக்கொண்டு நன்மையே பேசுவதென்று தீர்மானியுங்கள் பார்க்கலாம்" என்றார் அந்தப் பெரியவர். அந்த அம்மாவும் ஒரு வாரம் இதை ஒரு பயிற்சியாகவே செய்தார். அவ்வளவு தான் அவரது முகத்தில் ஒரு தனி மலர்ச்சி ஏற்பட்டதாம்.

ஒருவர் மீது குறை சொல்வதை விட அவர் செய்த நல்ல செயலை நினைத்து அவருக்கு பாராட்டும் நன்றியும் சொல்லும் போது மன அமைதி ஏற்படும். முகத்தில் புன்சிரிப்பு வரும். எப்போதும் சந்தோஷமாக இருக்க முடியும் இது ஏதோ வெறும் உண்மை அல்ல. அனுபவசாலிகள் சொல்லும் உண்மை.

ஏன் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறோம்? மனிதப்பிறவியின் நோக்கம் என்ன? இந்தக் கேள்விக்கு அந்தப் பெரியவர் என்ன சொல்கிறார் தெரியும்மா? "எனக்கு என்ன தேவை? என்று உன்னை நீயே கேட்டுப்பார் மனநிறைவும் மகிழ்ச்சியும் தான் தேவை என்பது புரியும். இதுதான் மனிதப்பிறவியின் பெருநோக்கம்" என்கிறார். அவர் மனித வாழ்வின் வெற்றிக்கெல்லாம் சிகரமானது மனநிறைவுதான். அதை உணர்ந்து கொள்வது, பயிற்சி செய்வது, பயனடைவது போன்ற யாவும் மிகுந்த சுலபம். முயற்சி தான் தேவை என்கிறார் அவர்.

நாம் எங்கே இருக்கிறோம்? எப்படி இருக்கிறோம். எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை முதலில் கணிக்க வேண்டும். அதாவது வயதில், வாழ்வில்,கல்வியில், செயல் திறமையில்,அறிவின் நுட்பத்தில்,பொருள் வளத்தில், அதிகாரத்தில் நாம் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அதைக் கொண்டு நமக்கு,குடும்பத்துக்கு, சுற்றத்தாருக்கு, ஊருக்கு, உலகத்திற்கு என்ன நன்மை செய்ய முடியும் என்று பார்க்கவேண்டும். முடிந்தளவில் செய்யவேண்டும்.அதைச் செய்வதற்கு வேண்டிய திறமையை வளர்த்துக் கொள்வதற்கு திட்டம் போட்டு முறையான பயிற்சி மூலமாக வளர்த்துக் கொள்ள வேண்டும. ஒரு பெரிய இன்ப ஊற்று உள்ளத்தில் ஊறத் தொடங்கி விடும் என்கிறார் அவர். "எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே! எதிர்பார்ப்பது பெரும்பாலும் ஏமாற்றத்தில் தான் முடியும். இந்த ஏமாற்றம் இன்பஊற்றை அடைத்துவிடும்" என்கிறார்.

நல்லது செய்வதோடு விட்டுவிடவேண்டும்.அதற்குப் பதில் எதிர்பார்ப்பதையும் மறந்துவிட வேண்டும். அவசியமில்லாமல் அடுத்தவர்களின் விடயத்தில் தலையிடக்கூடாது. நமது கடமையிலிருந்து நழுவக்கூடாது. இதனால் நம்மீது மற்றவர்களுக்கு ஒரு மதிப்பு ஏற்படும்.நமது மனதுக்கு அமைதியும் கிடைக்கும்.

மூன்று விடயத்தை நாம் முக்கியமாக பழகிக்கொள்ள வேண்டும். சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் தேவைக்குத்தகுந்த மாதிரியும் சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரியும் இதைப் பயன்படுத்த வேண்டும். இப்படிச் செய்ய ஆரம்பித்து விட்டால் இந்த உலகமே நமது நட்பை விரும்புமாம். நமக்கு முன்னாலும் பின்னாலும் சூழ்ந்து ஊடுருவியும் இயற்கையின் பெரிய ஆற்றல் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

மனித செயல் ஒவ்வொன்றுக்கும் தகுந்த விளைவை இன்பமாகவோ துன்பமாகவோ கொடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த உண்மையை மறக்கக்கூடாது. அந்தப்பேராற்றலை மதித்து நமது செயலில் அளவு முறை ஒழுங்கு போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இது தான் உயர்வான தெய்வவழிபாடு என்பது சும்மா வேஷம் போட்டுக்கொண்டிருப்பதெல்லாம் வழிபாடு ஆகாது. அந்தப் பேராற்றலுடன் நம்முடைய மனம் இணைந்துவிட்டால் நமக்கு எப்போதும் மகிழ்ச்சிதான். அமைதி நிறைவு ஏற்படும். பிறவியின் நோக்கம் அப்போதுதான் நிறைவேறும்.

இதுதான் அந்தப் பெரியவர் சொல்லியிருக்கும் நுட்பம். அவர் சொல்லும் நிலைக்கும் நாம் இருக்கும் நிலைக்கும் எவ்வளவு தூரம் என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். வேறு ஒன்றும் வேண்டாம் சார். விட்டுக்கொடுப்பது என்று சொன்னரே... அந்த ஒரு விஷயம் சரியாக இருக்கிறதா நம்மிடம்?

இரண்டு நெருங்கிய சிநேகிதர்கள் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவன் சொன்னான் "என்னிடம் இப்போது இரண்டு இலட்சம் ரூபா பணம் இருந்தால் அதில் பாதியை உன்னிடம் கொடுத்து விடுவேன்" என்றார். "உன்னிடம் இரண்டு கார் இருந்தால் என்ன செய்வாய்?" என்று கேட்டான் இரண்டாமவன். "ஒரு காரை உனக்குக் கொடுத்துவிடுவேன்" என்றான்: 'உன்னிடம் 2 பங்களா இருந்தால்?' எனறு கேட்டான் இவன்."அதில் ஒன்றை உனக்குக் கொடுத்து விடுவேன்" என்றான். "சரி! உன்னிடம் இரண்டு பேனா இருந்தால் என்னிடம் ஒரு பேனாவைத் தருவாயா?" என்றான். "அதுமட்டும் முடியாது கொடுக்கமாட்டேன்" என்று கூறிவிட்டான் அவன். "என்னது? பணம், கார்,பங்களாவெல்லாம் தருகிறேன் என்றாய்! பேனாவைமட்டும் தரமாட்டேன் என்கிறாயே?" என்றான்."இரண்டு பேனா உண்மையாகவே என்னிடம் இருக்கிறதே அதனால் அப்படிச் சொன்னேன்" என்றான் அவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகவே ஐ. நா. சபை செயற்பட்டு வருகிறது

## இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகமொன்று குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பாக செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தென்னிலங்கை ஊடகமொன்று இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளது.

அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யனின் படுகொலை தொடர்பில் ஐ.நா. செயலாளர் கண்டன அறிக்கை வெளியிடுவதற்கு இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி லேமீயோ தான் காரணமென அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஐ.நா. செயலாளரின் இந்த அறிக்கை குறித்து கண்டனம் வெளியிட்ட ஜாதிகஹெல உறுமயவினருக்கு இந்த அறிக்கை குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, ஐ.நா. செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்தவேளை, வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்திக்குமாறு லேமியோ அவரை வலியுறுத்தியதாகவும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அடுத்து இந்த விஜயம் தடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் உப அலுவலகங்கள் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலேயே அமைந்துள்ளதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுககுச் சார்பாகவே ஐக்கிய நாடுகள் சபை செயற்படுகின்றமைக்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது எனவும் அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த காலங்களில் இலங்கையின் அரசியல் விவகாரங்களில் தலையீடு செய்த குற்றச்சாட்டின் பேரில் ஐ.நா.அதிதிகளான பீற்றர் வின்ஹோம் மற்றும் அடேல் ஒப்சேற் ஆகியோர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வேண்டுகோளினை அடுத்து நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# அரசின் திட்டங்களைக் குழப்புவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி அறிவிப்பு



(காலி)

எந்தவொரு அரசாங்கமும் எதிர்நோக்காத பாரிய அனர்த்தத்திற்கு நாடு தள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுவரும் திட்டங்களைக் குழப்புவதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செயற்படுபவர்கள் யாராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவ் வைபவத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரசாங்கத்தினால் நாட்டின் அபிவிருத்திக்காக பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. அதற்குப் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. தற்போது இதற்குத் தேவையான நிதி திறைசேரியிடமும் போதிய அளவு இல்லை. அதனால தற்போது வெளிநாட்டு உதவிகளையே எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

சிலர் தனிப்பட்ட காரணங்களுக்காக அரசின் நடவடிக்கைகளைக் குழப்ப முயல்கின்றன. இந்நடவடிக்கைகள் இனங்காணப்படும் பட்சத்தில் அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும். நாடு என்றுமில்லாதவாறு பாரிய அழிவினை எதிர்நோக்கியுள்ளது. இவ் அழிவில் இருந்து மீள்வதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பது எமக்குத் தெரியாது.

அதனைக் கருத்திற் கொண்டு நாங்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் இப்பணியினை மேற்கொண்டே வருகின்றோம். அப்படியிருந்தும் அதனைக் குழப்ப முயன்று வருவது பாரிய குற்றமாகும்.

கடல் பேரலைகளின் காரணமாகப் பாதிக்கப்பட்ட நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக உரிய திட்டங்களை மேற்கொள்ள அரசாங்கத்தால் முடிந்துள்ளது. இதற்கு அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பினை வழங்குவது அவசியமாகும் எனவும் குறிப்பிட்டார். (ற-4)

## சுனாமி நிவாரண நிதியாக

# 10 மில்லியன் அமெ.டொலர் ஈரான் இலங்கைக்கு உதவி

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஈரான் அரசாங்கம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை இலங்கைக்கு விஜயம் செய்த ஈரான் பிரதி வெளிவிவகார அமைச்சர் மொஸான் அமீன் சாஹீ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இந் நிதியினைக் கையளித்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்கள் குறித்து ஈரான் மக்கள் அதிகளவில் கவலையடைந்திருப்பதாக மொஸான் அமீன் சாஹீ இச்சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிர்காலத்தில் சகல ஆதரவுகளையும் வழங்குவதற்கு ஈரான் தயாராகவிருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பின் போது இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவு குறித்து கலந்துரையாடப்பட்டதுடன்,ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியன விடயத்தில் விசேட இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவது குறித்தும் விசேடமாக ஆராயப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான ஈரான் தூதுவர் பேகம்பறாஸ் உட்பட பலர் கலந்து கொண்டதாக ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## முப்பத்துநான்கு நாட்களில் 4 மேஜர் ஜெனரல்கள் ஓய்வு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் மேஜர் ஜெனரல் தரத்தல் உள்ள நான்கு போ எதிாவரும் மாாச் முதலாம் திகதிக்கும் ஏப்ரல் 4 ஆம் திகதிக்கும் இடையில் ஓய்வு பெற வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

யாழ்.மாவட்ட முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய இராணுவ அதிகாாிகளின் பதில பிரதானியுமான மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால மார்ச் முதலாம் திகதி ஓய்வுபெற வேண்டிய நிலையிலும் இராணுவ தொண்டர் படைகளின் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி மாாச் 24 ஆம் திகதி ஓய்வு பெறவேண்டிய நிலையிலும் உள்ளனர். படை அதிகாாிகளின் பிரதானியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஏப்ரல் முதாலாம் திகதி ஓய்வு பெறவுள்ளாா. இராணுவத்தின் பனாகொட முகாமின் பிாிவு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர ஏப்ரல் 4 ஆம் திகதி ஓய்வு பெறவேண்டிய நிலையில் உள்ளாா. 34 நாட்களுக்குள் நான்கு மேஜர் ஜெனரல் தர அதிகாாிகள் ஓய்வுபெறுவது இதுதான் முதற் தடவை என்று படைத்துறை வட்டாரங்கள் தொிவிக்கின்றன. (ற-4)

புனானைப் படுகொலைச் சம்பவத்தினது

# சூத்திரதாரிகளை இனம்காணுதல் மூலமே சமாதானம் மீதான நம்பிக்கை வலுப்பெறும்

## வலி.தென்மேற்கு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்

இந்நாட்டில் சமாதானச் சூழ்நிலையைக் குழப்புவதற்கான சுயநலவாதிகளினால் மேறகொள்ளப்பட்ட படுகொலைகளின் சூத்திரதாரிகளை இனங்கண்டு அவர்களுடைய அராஜகச் செயல்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதன்மூலமே சமாதானம மீதான நம்பிக்கையை வலுப்படுத்த முடியும் எனத் தெரிவித்து வலிமேற்குப் பிரதேச பொது அமைப்புகள் ஒன்றியம் இலங்கை யுத்தநிறுத்தக் கணகாணிப்புக் குழுவினரிடம் மகஜா ஒன்றைக் கையளித்துள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைபும், இலங்கை அரசும் இணைந்து பல்வேறு சிரமங்களுக்கும், இடர்பாடுகளுக்கும் மத்தியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டதும், இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடைய இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பும் ஒரே நோக்குடன் வரையப்பட்டது.

இருப்பினும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு மூன்று ஆண்டுகள் கழிந்த நிலையிலும் இதன் இலக்கை இமமியளவும் அடையமுடியாமல் பல தடைகளை ஏற்படுத்தி, ஒப்பந்தத்திற்கு முரணான செயற்பாடுகளினால் முனைப்புடன் அரசு செயற்பட்டு வந்துள்ளது. இவ்வொப்பந்தத்தின் மூலம் தென்பகுதி மக்கள் கூடிய நன்மைகளை அனுபவித்துவரும் இவ்வேளையில், வட - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் இற்றைவரை இயல்பு வாழ்க்கைக்கு வரமுடியாமல் பல துன்பங்களை அனுபவிப்பது மட்டுமல்லாமல் பல அச்சுறுத்தல்களுக்கும் முகம்கொடுக்கவேண்டியவர்களாக இருந்துவருகின்றனர்.

இந்நிலையில் இலங்கையில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தம் அனைத்து மக்களின் இயல்பு வாழ்க்கையை மேலும் கேள்விக்குறியாக்கியுள்ளது. தொகை வகையின்றி, வயது வேறுபாடின்றி இனமத பேதங்களைத் தாண்டி இப்பேரலை மக்களின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுததி மேலும் மக்களைச் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக்கி விட்டது.

இவ்வாறான நிலையில் நிவாரணப் பணிகளில் முமமுரமாக ஈடுபாடு கொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டி எழுப்பும் நோக்குடன் கிழக்கு மாகாணத்தில் செயற பட்டுவந்த அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் மற்றும் மூன்று போராளிகளும் திட்டமிட்ட முறையில் அரச யந்திரமாகக் செயற்படும் இராணுவததுடன் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுவரும் ஆயுதக்குழுக்களும் இணைந்து நிராயுதபாணிகளாக புலி உறுப்பினர்கள் வாகனத்தில வந்து கொண்டிருந்தவேளை கிழக்கிலுள்ள இரு பெரிய இராணுவ முகாம்களுக்கிடையில் வைத்து தாககுதல் நடத்தியமை மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையும், கவலையையும் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறான அரசியற் படுகொலைகளுக்கும் தற்போதைய அரசினருக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று அரச ஊடகங்கள் வாயிலாக அரசு அறிக்கைகளை மக்கள் மத்தியில் செய்திகளை வெளியிடுவது அப்பட்டமான ஜனநாயக விரோத நடவடிக்கையாகவே நாம் கருதுவதோடு இவ்வாறான உண்மைக்கு மாறான செய்திகளை வன்மையாகவும் கண்டிக்கிறோம்.

இச்சம்பவத்திற்கு முன்னரும் அரசியல் பணியில் நிராயுதபாணிகளாக ஈடுபட்டு செயற்பட்டு வந்த விடுதலைப்புலிகளின் பல உறுப்பினர்களை அரசு பல்வேறு சந்தர்ப்பங்களில் இராணுவக் கட்டமைப்பின் உதவியுடன் கொலைசெய்து வந்துள்ளது.

இவ்வாறான அரசின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் மேலும் கசப்புணர்வுகளை வளர்த்துக் சாமாதானச் சூழலைப் பாதிக்கக்கூடிய செயற்பாடாகவே அமைந்து விடுகின்றது.

ஆகவே எதிர்காலத்தில் இவ்வாறான அராஜகச் செயல்களுக்கு ஊக்கமளித்துவரும் அரசின் ஒட்டுமொத்தமான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அரசு இது விடயத்தில் மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

இவற்றைவிட ஆழிப்பேரலை ஆனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகலவழிகளிலும் உதவும் முகமாக சர்வதேச சமூகமும், பல அரச சார்பற்ற நிறுவனங்களும் பெருந்தொகையான உதவிப் பொருட்களையும், நிதிகளையும் தாராளமாக அரசுக்கு வழங்கி வருகின்றது. இருப்பினும் அரசு இதுவிடயத்தில் வடகிழக்கு மக்களுக்கு திட்டமிட்ட முறையில் உதவுவதைத் தவிர்த்து தென்பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றது. இது தொடர்பாக சர்வதேச சமூகமும், பல அரச சாாபற்ற நிறுவனங்களும் கண்டன அறிக்கைகளை ஊடகங்கள் வாயிலாகத் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டுமென்று அரசுக்குப் பல அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதும் அரசு அதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை.

இவ்வாறான மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அரசு செயற்படுமானால் பல்லின மக்கள் வாழும் இலங்கையில் தமிழர்கள் தமககென ஒரு தேசத்தைப் பிரகடனப்படுத்துவது தவிர்க்கமுடியாததொன்றாகும் என்பதனை எமது ஒன்றியம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

இந்நாட்டில் சமாதானச் சூழ்நிலையைக் குழப்புவதற்காக சுயநலவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் சூத்திரதாரிகளை இனங்கண்டு அவர்களுடைய அராஜக செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருந்தால் இவ்வாறான படுகொலைகள் நிகழாமல் தடுத்திருக்கமுடியும் என்பதனை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்கு அறியத் தருவதோடு எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமலிருப்பதற்கும் தற்போதைய சமாதானச் சூழலில் மக்கள் தம் வாழ்வியற் பிரச்சினைகளுக்கு விடிவு காண்பதோடு அரசியலில் தன்னிறைவு காண்பதற்கும் வழி வகுக்கும் என இம்மகஜர் மூலம் தங்களுக்கு வலியுறுத்த விரும்புகின்றோம என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-19)

# விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

1981 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் . ஆண்டுவரையான காலகட்டததில் இனவன்செயலில் பாதிக்கப்பட்டோர் நஷ்டஈடுகோரும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி 2005 பெப்ரவரி 28ஆம திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சுனாமி தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில பலர்- கஷ்டங்களுக்குள்ளாகி இருப்பதைக் கருத்திற்கொண்டே இந்தத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பங்கள் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமையோ அல்லது அதற்கு முன்னதாகவோ செயலாளர், நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள் இணக்கப்பாட்டு அமைச்சு, இல.177 காலிவீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (க-9)

# பஞ்சாங்கங்களில் குழப்பங்கள்

## ஆராய விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளியிடப்படும் இந்து மக்களுக்குரிய விரத தினங்களை அறிந்துகொள்ளக்கூடிய வாக்கியம், திருக்கணிதம் ஆகிய பஞ்சாங்கங்கள் இரண்டிலும் இவ்வாண்டுக்குரிய சில விரத தினங்களில் பாரிய வேறுபாடு காணப்படுவதாக இந்து அமைப்புகள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைகளத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளன.

குறிப்பாக 2005 - 2006ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்டுள்ள இவ்விரு பஞ்சாங்கங்களிலும் திருக்கார்த்திகை விரதம், விநாயகர் விரதம், திருவெம்பாவை போன்ற முக்கிய விரத தினங்களில் ஏறத்தாழ ஒருமாத கால வேறுபாடு காணபபடுவதாகவும் இதனால் இந்து மக்கள் இவ்விரத தினங்களை தீர்மானித்துக்கொள்வதில் பெரும் இடாபாடுகளை எதிர்நோக்குவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரத தினங்கள் தொடர்பாக தீர்க்கமான ஒரு முடிவை மேறகொள்வதற்காக ஆலய அறங்காவலர்கள், இந்துசமயு ஆசாரங்களில் சிறப்புத்தேர்ச்சி பெற்றோர், பஞ்சாங்கங்கள் தொடர்பான அறிவு மிக்கோர் ஆகியோருடனான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3.00மணிக்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விரத தினங்கள் தொடர்பாக மேலும் விபரம் அறிந்தவர்களும், ஆர்வமிக்கவர்களும் இக்கலந்துரையாடலில் பங்குகொண்டு தமது கருத்துக்களையும் தெரிவிக்கலாம் என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சர்வதேச சந்தையில் பப்பாசிக்கு பெரும் மவுசு

(கொழும்பு)

விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை முறைகளை அறிமுகம் செய்ய விவசாய விரிவாக்க அமைப்பு திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய சர்வதேச சந்தையில் மிகுந்த கிராக்கியைப் பெற்றுள்ள பப்பாசி உற்பத்தியை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

உயர் ரக விதைகள், சிறந்த பசளை வகைகள், நவீன பயிரிடல் முறைகள் என்பனவற்றை இலவசமாகப் பெற்றுக்கொடுப்பதன் மூலம இந்த விவசாயத் துறையை மேம்படுத்த மேற்படி அமைப்பு திட்டம் வகுத்துள்ளது. (க)

# இலட்சார்ச்சனை

(பொன்னாலை)

பொன்னாலை - ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் இலட்சார்ச்சனை இடம்பெற்றுவருகிறது.

எதிர்வரும் 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இவ்இலட்ச அர்ச்சனையில் தினமும் முற்பகல் 10.30மணிக்கும் பிற்பகல் 3.30மணிக்கும் வசந்தமண்டப் பூசை இடம்பெற்று ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத வரதராஜப் பெருமானுக்கு இலட்சார்ச்சனை இடம் பெற்றுவருகிறது. (ப-49)

# உடபேராதனையில் திடீர் காட்டுத் தீ!

(கொழும்பு)


உடபேராதனை மலையில் ஏற்பட்ட திடீர் காட்டுத் தீயினால் பிரதேசம் எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மேல் பகுதியில் அமைந்துள்ள உடபேராதனை மலையில் கடந்த திங்கட்கிழமை திடீரெனத் தீ பரவியதாகக் கூறப்படுகிறது. இதனால் வனபரிபாலன திணைக்களத்திற்குச் சொந்தமான காட்டுப்பகுதி எரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் அயலவர்களின் முயற்சியால் அத்தீ ஏனைய இடங்களுக்குப் பரவாமல தடுக்கப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. (க)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற முதலாம் தர மாணவர்களை வைபவரீதியாகச் சேர்க்கும் கால்கோள் விழாவில் முதலாம் தர மாணவர்களை இரண்டாம் தர மாணவர்கள் மாலை அணிவித்து அழைத்துச்செல்லும் காட்சியைப் படத்தில் காணலாம்.



உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலையில் இடம்பெற்ற தரம் I மாணவர்களைச் சேர்க்கும் கால்கோள் விழாவில் தரம் I ஆசிரியரை தரம் I மாணவி ஒருவர் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கிறார். அருகில் வணபிதா பி.ஜே.அன்ரனி பாலா அடிகளாரையும் ஓய்வுபெற்ற ஆசிரியர் சு.மாசிலாமணி ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்: கோப்பாய் நிருபர்)

# 1000 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சியைப் பிடித்தனர்

## ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் பெருவெற்றி

ஈராக தேர்தலின் இறுதிமுடிவை அந்நாட்டுத தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் அறிவித்தது. இத்தேர்தலில் வரலாற்றுச் சிறப்புப்பெற்ற வெற்றியை ஷியா முஸ்லிம் கட்சிகள் பெற்றுள்ளன.

சென்ற மாதம் 30ஆம் திகதி ஈராக்கில் நடைபெற்ற தேர்தலில சதாம ஹுசைன் ஆட்சிக் காலத்தில் அடக்கியோடுக்கி வைக்கப்பட்டிருந்த ஷியா முஸ்லிம் கட்சிகள் பெருவெற்றியை ஈட்டியுள்ளன.

275 இடங்களைக் கொணட ஈராக் பாராளுமன்றத்தில் ஷியா முஸ்லிம் கட்சிகள் 140 இடங்களைக கைபபறறிப பெருமபான்மை பெற்றதன்மூலம் அரபுநாடுகளின் வரலாற்றில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் ஆடசியைப் பிடித்த பெருமையை ஈராக் ஷியா முஸ்லிம்கள் பெற்றுள்ளனர். (து)



இந்தியா வந்துள்ள ஆஸ்திரியா அதிபர் ஹெய்ன்ஸ் பஷரை ஜனாதிபதி அப்துல் கலாம் வரவேற்ற காட்சி.

# ஊழல் பேர்வழிகளுக்கு எதிராக மன்னர் ஞானேந்திரா நடவடிக்கை



ஊழல் அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகளைத் தூக்கி உள்ளே போட அதிரடி நடவடிககையாக ஆறுபோ கொண்ட ஊழல் தடுப்புக் கமிஷனை நேபாள மன்னர் ஞானேந்திரா அமைத்துள்ளார்.

நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் துபா அரசைக் கலைத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள மன்னர் ஞானேந்திரா தொடர்ந்து பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்.

ஊழல் அரசியல் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் விசாரித்து தண்டனையளிகக சுய அதிகாரம் கொண்ட ஊழல் தடுப்புக் கமிஷனை அமைத்துள்ளார். இதில் ஆறு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இக் கமிஷனுக்கு நேபாள நீதிமன்றத்துக்குச் சமமான அதிகாரம் தரப்பட்டுள்ளது. ஊழல் குற்றச்சாடடுக்கு ஆளாகும் அரசியல தலைவர்கள், அதிகாரிகளை நேரடியாக இவர்களே விசாரித்துத் தண்டனை அளிக்கலாம். அவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்யலாம். (து)

# சுனாமி எச்சரிக்கை மையத்தின் மீது வழக்கு நியூயோர்க் நீதிமன்றத்தில் தொடர முடிவு

ஆழிப்பேரலை (சுனாமி) தாக்குதல் அபாயம் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கத் தவறியதற்காக அமெரிக்க சுனாமி எச்சரிக்கை மையத்தின் மீது வழக்குத் தொட முடிவு செய்யபபடடுள்ளதாகத் தெரிகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆஸ்திரியா மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த 19 பேர் நியூயோர்க் நதிமன்றததில் இந்த வழக்கைத் தொடரத் திட்டமிட்டுள்ளனர். இவாகள் சார்பில ஆஜராகவிருககும் அமெரிக்க மற்றும் ஆஸ்திரிய வழக்கறிஞர்கள் இத்தகவலை வியன்னாவில் நிருபர்களிடம் தெரிவித்தனர்.

அமெரிககாவில ஹவாய் தவல் சுனாமி எச்சரிக்கை மையம் அமைந்துள்ளது. சுனாமி பற்றி முன்கூட்டியே எச்சரிக்காமல் இந்த மையம் அலட்சியத்துடன் இருந்துவிட்டதாக வழக்கறிஞர்கள் குற்றம்சாட்டினர். தாய்லாந்துக் குச் சுற்றுலா சென்றபோது அக்கார் ஹோடடலில் தங்கியிருந்தவர்கள் சுனாமியால பாதிக்கப்பட்டனர். அவ்வாறு பாதிக்கப் படட சிலர் தாய்லாந்து அரசு மற்றும் அக்கார் ஹோட்டல் ஆகியவற்றின் மீது வழககுத் தொடரத் திடடமிட்டுள்ளனா. ஆழிப் பேரலையால் ஆபத்து ஏற்படும் என முன் கூட்டியே எச்சரித்திருந்தால் பெருமளவு உயிர்சேதத்தைத் தவிர்த்திருக்கலாம் எனப் பாதிக்கப்படடவர்கள் கூறியுள்ளனர்.

இதை உலகிலுள்ள அனைவருக்கும் உணர்த்தவே சுனாமி எச்சரிக்கை மையத்தின் மீது வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளோம் என்று அவர்கள் கூறினர். (து)

WORLD NEWS
உலக தரிசனம்

# சதி முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாக அமெ.புலனாய்வுப் பிரிவு அறிவிப்பு

நியூயோர்க் நகரில் கடந்த ஆண்டு பாகிஸ்தான் தூதரக அதிகாரியைக் கொலைசெய்ய அல் - ஹெய்டா தீவிரவாதிகள் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அமெரிக்க புலனாய்வுப் பிரிவு இயக்குனர் ராபர்ட் எஸ்.முல்லர் கூறுகையில், கடந்த ஆண்டு நியூயோர்க் நகரில் பாகிஸ்தான் தூதரக அதிகாரியைக் கொலைசெய்ய பணப் பரிமாற்றம் நடந்தது. அல் - ஹெய்டா நடத்திய இந்த சதியைப் புலனாயவுப் பிரிவினர் கண்டறிந்து யாசின் முகை தீன ஆரிப் என்பவரை கைதுசெய்தனர்.

நியூயோர்க், வோஷிங்டன், நியூ ஜெர்சி நகரங்களில் பல்வேறு முக்கிய நிதி நிறுவனங்களைத் தகர்க்க நடந்த சதியும இதுபோல முறியடிக்கப்பட்டது.

பிரிட்டனிலும் நிதி நிறுவனங்களை தகர்க்க நடந்த சதியை முறியடித்து அந்நாட்டுப் பொலிஸார் பலரைக் கைது செய்தனர் என்றார். (து)

# சிக்கல் நிறைந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென நட்வர் சிங் நம்பிக்கை

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுககுமிடையே இன்னும் தீர்க்கப்படவேண்டிய அதிக சிக்கல் நிறைந்த பிரச்சினைகள் உள்ளன.

இருநாடுகளும் தங்களுக்குள் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் நம்பிக்கை தெரிவித்தார். பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நட்வர் சிங், லாகூரில் பத்திரிகையாளர்கள் சங்கம கடநத வியாழககிழமை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் அமைதியையும் நட்புறவையும் பராமரிக்கவே இந்தியா விரும்புகிறது. கருததுவேறுபாடுகளை அகறறவும் பரஸ்பரம் நம்பிக்கையை ஏற்படுத்தவும் இந்தியா முயன்று வருகிறது. சநதேகங்களையும் தவறான கண்ணோட்டத்தையும தவிர்ப்பதன் மூலம் நட்புறவை மேம்படுத்த முடியும் என இந்தியா கருதுகிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த வேண்டும. பாகிஸ்தான் அதிபர் முஷாரப், பிரதமர் சௌகத் அஜீஸ் ஆகியோரைச் சந்தித்தபோது இக்கருத்துக்களை வலியுறுத்தினேன் என அவர் மேலும் கூறினார்.

அமிருதசரஸ் - லாகூர் இடையேயும், நான்கானா சாஹிப் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்கும் பஸ் போக்குவரத்து தொடங்கப்படும். கோக்ராபூர் - முன்னாபாவ் இடையே ரயில் போக்குவரத்தைத் தொடஙகுவதற்கான நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுடன் விவாதிக்க பாகிஸ்தான் ஒப்புககொண்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையே அமைதி நிலவவேண்டும் என்பதில் இருதரப்புப் பொதுமக்களும் ஆர்வம் கொண்டுள்ளனர். எனவே இருதரப்பினரும் சந்தித்துக் கொள்ளத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்தியாவுக்கு வருகைதர விரும்பும் பாகிஸ்தான் பிரஜைகளுக்கு விசா விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. இந்தியாவில் கலவிகற்க விரும்பும பாகிஸ்தான் மாணவர்களுக்கு சிறப்பு விசாக்களை அளிக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இரு நாடுகளிலும் வறுமையை ஒழித்து வளத்துக்கு வழிவகுக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இருதரப்பு ஒத்துழைப்புக்கான வழிவகைகள் குறித்து ஆய்வுசெய்வதற்காக உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் இம்மாதம் 22, 23ஆகிய திகதிகளில் கூடவிருக்கிறது என அவர் தொடாந்து பேசுகையில் தெரிவத்தார். (து)



## நான்கு நாடுகளின் துணியில் நவீன ஆடை

லண்டனில் நேற்றுமுன்தினம் நடந்த ஆடை அலங்கார அணிவகுப்பில் இங்கிலாந்து நடிகை தம்ஷின் வித்தியாசமான உடையில் வந்து கலக்கினார்.

நான்கு பெரிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளைக்கொண்டு அந்த உடை உருவாககப்பட்டிருந்தது. அந்த உடையை லண்டனில் உள்ள பேஷன் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.

குறிப்பிட்ட நான்கு நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் நிலையை உணர்த்துவதற்காக அந்த ஆடை அவ்விதமாகத் தயாரிககப்பட்டதாகச் சொல்லப் படுகின்றது. அந்த ஆடைக்கு 'தி டாலர் ஏ டே டிரஸ்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.



லெபனான் நாட்டு முன்னாள் பிரதமா ரபீக் ஹரீரி கடந்த திங்கட்கிழமை குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். அவரது நினைவிடத்தில் நேற்றுமுன்தினம் பிரான்ஸ் அதபர் ஜாக்கு சிராஜ், அவரது மனைவி பெர்னடி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். லெபனான் தலைநகர் பெயருட்டில் உள்ள ரபீக் ஹரீரியின் நினைவிடத்தில் அப்போது அவரது மனைவி கண்ணீருடன் மெழுகு வர்த்திகளை ஏற்றி பிரார்த்தனை செய்தார்.

### தென்மராட்சியில் அவலநிலை தொடர்கிறது

# அரச உதவிகள் எதுவுமே கிட்டவில்லை வீடமைப்புப் பணிகள்யாவும் ஸ்தம்பிதம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்தத்தின போது முழுமை யாகவும் பகுதியாகவும் அழிந்த நிலையிலுள்ள வீடுகளைப் புன ரமைப்பதற்கான வசதிவாய்பபுக் கள் அற்ற நிலையில் பெரும் பாலான குடும்பங்கள் இருப்ப தன் காரணமாக அழிக்கப் பட்ட வீடுகள் இன்னமும் புனர மைக்கப்படாமலே இருந்துவரு கின்றன.

எனினும் அழிந்த நிலையி லுள்ள வீடுகளைப் புனரமைப் பதற்கான நிதியுதவிகளையோ அல்லது கட்டடப் பொருட்க ளையோ அரசாங்கம் இதுவரை வழங்க முன்வரவில்லை என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்த அனர்த்தத்தின் போது சுமார் 8ஆயிரம் வீடு கள் முழுமையாகவும், சுமார் 8ஆயிரத்து 500வீடுகள் பகுதி யாகவும் சேதமடைந்தன என தென்மராட்சி பிரதேச செயல கப் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவருகின்றது.

இதேசமயம், தென்மராட்சிப் பிரதேசத்தில் ஜ.ரி.சற் 175 வீடுகளையும நிக்கொட்திட்டத் தின் கீழ் 125வீடுகளையும் உலக வங்கித்திட்டத்தின் 50வீடு கள் என மொத்தம் 350வீடுகள மட்டுமே நிர்மாணிக்கப்பட்டு வருகினறன. ஆயினும் இம் மூன்று வீட்டுத்திட்டங்களும் கூட இன்னமும் முழுமையாகப பூரணப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதா கும். (ப-16)

## அனுமதிக்கான பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண் கலைமாணி கற்கை நெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சை எதிர் வரும் 28ஆம் திகதி முற்பகல் 9.00மணிக்கு இராமநாதன் மண் டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலைக்கழ கத்தில் கொடுக்கப்படுகின்ற பரீட்சை அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் விண்ணப்பதாரி கள் கலந்துகொள்ளலாம்.

ஏற்கனவே பல்கலைக்கழக பட்டபபடிப்புக்குப் பதிவினை மேற் கொண்டவர்களும் க.பொ.த. உயர் தரம் 2004ஆம் ஆண்டு பரீட்சை மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற் கான ஆகக்குறைந்த தகைமை கொண்ட எப்பரீட்சார்த்தியும் அனுமதிப் பரீட்சைக்குத் தோற்று வதற்குத் தகுதியுடையவாகளா வார்கள். (ப-95)

### வடமராட்சிப் பிரதேசத்தில்

## சுனாமியால் சேதமான பாடசாலைகளை சுவிஸ்.கூட்டுத்தாபனம் புனரமைக்கும்

(யாழ்பபாணம்)

சுனாமி பேரலையினால் வடம ராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் முழுமையாக வும், பகுதியாகவும் சேதம டைந்த பதின்நான்கு பாடசாலை களையும் புனரமைப்புச் செய வதற்கு 96.10மில்லியன் ரூபா தேவையென மதிப்பீடுசெய்யப் பட்டுள்ளது.

சேதமடைந்து புனரமைப்புச் செய்யப்படவேணடிய 14 பாட சாலைகளுக்கான உத்தேச செலவு விபரங்கள் யாவும் தயாரிக்கப் பட்டதும் அவற்றினை யாழ்ப பாணத்தில் நிலைகொண்டிருக் கும் சுவிஸ் அபிவிருத்திக் கூட் டுததாபனம் புனரமைப்புச் செய் யவுள்ளதாகவும் தெரியவருகின் றது.

இதேசமயம் வெற்றிலைக் கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, தாளையடி றோமன் கத்தோ லிக்கப் பாடசாலை, மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாட சாலை மற்றும் வல்வெட்டித் துறை சிவகுருவித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகள் சுனாமியினால் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் மெத டிஸ்த மகளிர் கல்லூரி,ஹாட் லிக்கலலூரி, குடத்தனை றோமன் கததோலிக்கப் பாடசாலை உள் ளிட்ட எட்டுப் பாடசாலைகள் பகுதியாகச் சேதமடைந்துள்ள தென்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

### ஆளணிப் பற்றாக்குறையினால்

## மருதங்கேணி வைத்தியசாலையின் உள்ளக நோயாளர் பிரிவு செயலிழப்பு

(தென்மராட்சி)

நிக்கொட் திட்டத்தின் கீழ் 2.30மில்லியன் ரூபா செலவில் மருதங்கேணி அரசினர் கிரா மிய வைத்தியசாலை புனரமைப் புச் செய்யப்பட்டுள்ள போதி லும்கூட, அங்கு போதிய ஊழி யர்கள் இல்லாமை காரணமாக உள்ளக நோயாளர் பிரிவு இன் னமும் இயங்காமல் இருந்து வருகிறது. இதனால் அப்பகுதி யைச்சேர்ந்த பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள் ளனர்.

மருதங்கேணி அரசினர் கிரா மிய வைத்தியசாலையில் இப் போதும் வெளிநோயாளர் சிகிச்சை வழங்கல பணி மட்டுமே இடம் பெற்றுவருகின்றது.

இப்பிரச்சினை தொடர்பாக கடந்த மாதம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணி மனையில இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத் தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும்கூட, சுகாதாரப் பகு தியினர் இதுவிடயத்தில் இது வரை எத்தகைய நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை என் றும் தெரியவந்துள்ளது. (ப-16)

### சுனாமி அனர்த்தத்தால்

## வடமராட்சி பிரதேசத்தில் 7794 வீடுகள் பாதிப்பு

(தென்மராட்சி)

பருத்தித்துறை மற்றும மரு தங்கேணி பிரதேசங்களில் இடம் பெற்ற சுனாமி பேரலையின் காரணமாக 31கிராம சேவை யாளர் பிரிவுகளில் மொத்தமாக 596குடிசைகள் முழுமையாக வும் 6084 வீடுகள் முழுமை யாகவும் 1114வீடுகள் பகுதி யாகவும் சேதமடைந்துள்ளன எனத் தெரியவருகின்றது.

இந்த வகையில் பருத்தித் துறை பிரதேசசெயலர் பிரிவி லுள்ள 16கிராம சேவையாளர் பிரிவுகளில் 596 குடிசைகள் முற் றாகச் சேதமடைந்துள்ளன. அத் துடன் ஆயிரத்து 981வீடுகள முழுமையாகச் சேதமடைந்துள்ள துடன் ஆயிரத்து 114வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள் ளன.

அதேவேளை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிர தேசத்தில் 15கிராம சேவை யாளர் பிரிவுகளில் 4 ஆயிரத்து 103வீடுகள் முழுமையாகச் சேத மடைந்துள்ளன என்றும் தெரிய வந்துள்ளது. (ப-16)

### அணுவாயுத விற்பனையில்

## முகவராக செயற்பட்ட இலங்கையர் அமெரிக்காவிடம் கையளிக்கப்படார்

அணுவாயுத கறுப்புச்சந் தையில் இடைத்தரகராகச் செயற் பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை வர்த்தகரை அமெரிக் காவிடம் கையளிக்கப்போவ தில்லை என்று மலேசிய பிரத மர் அப்துல்லா அமாடபடாவி தெரிவித்துள்ளார்.

இவ்வர்த்தகர் கடந்த வருடம் அணுவாயுத சந்தையில் இடைத தரகராக செயற்படுவதாகக் குற் றம் சாட்டப்பட்டு மலேசியாவில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் தொடர்புபட்டிருந்த கறுப்புச்சந்தை வலையமைப்பு பாகிஸ்தான் விஞ்ஞானி ஒரு வரின் தலைமையில் ஒருங் கிணைக்கப்பட்டு வந்தது. தற் போது அவ் விஞ்ஞானி பாகிஸ தானில் வீட்டுக்காவலில் வைக் கப்பட்டுள்ளார். மலேசியாவில வசிக்கும் இலங்கையர் பாகிஸ் தானைச் சேர்ந்த விஞ்ஞானிக்கு அணுவாயுத தொழில்நுட்பத்தை விற்பனை செய்வதில் உதவி யதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.


இவர் கடந்த ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டு உள் நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்ப தாக மலேசியா தெரிவித்துள்ளது. இவரை அமெரிக்காவிடம் கைய ளிகக்கும் திட்டம் எதுவும் இருக் கின்றதா என்று கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதில ளித்த மலேசிய பிரதமர் இது தொடர்பான எவ்வித நகர்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என வும், குற்றம் சாட்டப்பட்டவர் தொடர்ந்தும் விசாரணைக்குட் படுத்தப்பட்டு வருவதாகவும் தெரி வித்தார். (ற)

## துப்பாக்கிச் சூடு; குடும்பஸ்தர் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியில் நேற்றுமுன்தினமிரவு முஸலிம் குடும்பஸ்தரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உதுமாலெப்பை சிராஜுதீன வயது 34 என்பவரே இந்தத் துப் பாக்கிச் சூட்டிற்கு இலக்கானதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். கடையொன்றில் நின்ற சமயம் ரி-56 ரக துப்பாக்கி சகிதம் வந்த இனந்தெரியாத நபரொருவர் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு தபபிச் சென்றுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (ற)





நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர் மணிலால் பெர்னாண்டோ யாழ்.பரியோவான் கல்லூரி யில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட பிரமுகர்களையும், உதைபந்தாட்டக் கழகங்களினது பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

(படங்கள்:- ஜங்கரன்)

# கௌசல்யன் குழு மீதான கொலைக் குற்றத்தை அநாமதேய குழுக்கள் மீது சுமத்த அரசு முயற்சி

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் குழு மீதான படுகொலைச் சம்பவத்திற்கு கருணா குழுதான் காரணம் என்றால, கருணா குழுவிற்கு அடைக்கலம் கொடுத்துள்ள அரசே இப்படுகொலைச் சம்பவத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டும். மாறாக அரசாங்கம அநாமதேயக் குழுக்களின் தலையில் இப்படுகொலைச் சம்பவத திற்கான பொறுப்பைச் சுமத்தி விட்டுத் தப்பிக்கொள்ளமுடியாது.

இவ்வாறு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தால் அரசின் செயல்களைக் கண்டித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடபபட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நீண்ட துயரிலிருந்து எமது தேசம் விடுதலை அடைந்து சுதந்திரமான சமாதன சகவாழ்வு கிட்டும் என எதிர்பாத்திருநதோம். ஆனால் அது இன்று சிதைவடையத் தொடங்கிவிட்டது. எமது காவலர்களான புலிகளின் மீதான தாக்குதல்கள் சமாதான சகவர்ழ்வு மீதான நம்பிக்கையை இல்லாது செய்து வருகிறது.

எமது தேசம் இயற்கைப் பேரழிவின் துயரில் மூழ்கியிருக்கும் இவ்வேளையில் இராணுவம் எமது அரசியல் போராளிகளை கொல்லும் சதிவேலையில் ஈடுபட்டு வருகிறது.

மட்டு. அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட 4 போராளிகளையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவையும் வெலிகந்தை பகுதியில் வஞ்சகமாகச் சுட்டுக் கொலைசெய்தது. இவர்களின் கொலைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும். ஆனால் சிறிலங்கா அரசோ கருணா குழு தான் இக்கொலைகளைச் செய்தது என்று இல்லாத ஒரு சக்தி பற்றிய பிரமையை உண்டு பண்ணி வருகிறது.

உண்மையில் சிறிலாங்கா அரசு அடைக்கலம் கொடுத்து வைத்துள்ள கருணாதான் பொறுப்பு என்றால் பதில்சொல்ல வேணடியது சிறிலங்கா அரசாங்கமே. அத்துடன் சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் பாது காப்பை நிலைநிறுத்த வேண்டியது அரசின் பொறுப்பே.

கொலைச் சம்பவம் இடம் பெற்ற இடத்தின் புறச்சூழல் சிறிலங்கா அரசின் பொய் முகததைக் காட்டுகிறது. முற்று முழுதாக படையினரின் பாது காபபில் உள்ள பிரதேசத்திலே இக் கொலை இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில அரசு பொறுப்பற்று நடந்துகொள்வது எமக்குக் கவலையைத் தருகிறது. சமாதானம் பேசிவரும் சாதக நிலையில் மறுபுறத்தில் இவ்வாறு படுகொலையில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது.

அரசு இவ்வாறான வஞ்சகததனததைக் கைவிட்டு நியாயமான வழியில் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பித்து உறுதியான ஒரு தீர்மானத்துக்கு வர வேணடும். இல்லையெனில் இவவாறான துன்பகரமான கொலைகள் தொடரும் பட்சத்தில் தமிழ்ச் சமூகம் தம்மைக் காத்துக கொள்ள மீண்டும் போராட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப் படலாம்.

போரற்ற வாழ்வை வேண்டி நிற்கும் நாம் சர்வதேசத்திடமும போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் நீதி கேட்டு நிற்கிறோம். எமது போராளிகள் நிராயுதபாணிகளாக அரசியல் வேலைகளில் ஈடுபட்டுள்ள நிலையில் அநாமதேய குழுக்களின் பெயரில் சிறிலங்கா அரசாங்கம இந்தவிதமான படுகொலைகளில ஈடுபடுவது அப்பட்டமான போர்நிறுத்த மீறலாகும். இதனை உடனடியாகக் கருத்திலெடுத்து சிறிலங்கா அரசின் இந்த கோழைதனமான செயல்களைக் கண்டித்து சமாதானப் பேச்சுவாத்தையை உடனடியாக ஆரம்பிக்க வழிசெய்ய வேண்டும்.

எதிர்கால விளைவுகள் விபரீதமாவதைத் தடுத்து நிறுத்தி சமாதான பேச்சுக்களைத் தொடர சர்வதேச நாடுகள் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும.

நாம் திறந்துவைத்துள்ள சமாதான கதவுகள் அடைபடாது காக்க வேண்டிய பொறுப்பு சர்வதேசத்திடமே உண்டு. அதனை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு உறுதிப்படுத்த வேண்டும். அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் அரசியல் பேராளிகள் மீதான தாக்குதல்கள உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் சமாதானப் பேச்சுக்கள உரிய முறையில் ஆரம்பிக்கப் படவேண்டும். போர் உருவாகி மீண்டும் துயருறும் நிலையை நாம் விரும்பவில்லை. எனவே தான் மீண்டும் சமாதான வழியில் மக்களாகத் திரண்டு நின்று குரலகொடுக்கிறோம் என அதில மேலும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ப-19)

## "மாசற்ற வழியில் நடப்போர் பேறுபெற்றோர்"



முகமது நபி ஒருமுறை முகம் கழுவ நீரை வாளியிலிருந்துகையில் அள்ளுகிறார். அத தண்ணீரில்தேள் இருப்தைக் கவனிக்க வில்லை. எனவே அத்தேள் அவரைக் கொட்டி விடுகின்றது. உடனே அதைக்கையிலிருந்து பிடுங்கி கீழே போடுகிறார்.

### தவக்காலச் சிந்தனை

அது, தனக்கு ஆபத்து என நினைத்து மீண்டும் வந்து அவருடைய காலில் கொட்டுகிறது. மீண்டும் உதறுகிறார். மீண்டும் கொட்டுகிறது. இப்படியே தொடர்கிறது. அப்போது அருகிலிருந் தவர் முகமது நபியைப் பார்த்து "அதைக் கொன்றுவிடுங்கள்" என்றாராம்.

அதற்கு நபிகள் "நான் அன்பு செய்வதில் நாட்டாமின்மையாக இருக்கக் கூடாது" என்றாராம். இதையே இயேசுவும "ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் காட்டு" என்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சாதாரணமாக வாழ்கிற வாழ்வல்ல மாறாக, வித்தியா சமாக வாழ்வதாகும்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# 20:20 முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி

புதிதாக அறிமுகப்படுத்தப் பட்ட 20:20 சர்வதேச கிரிக்கெற் போட்டியின் முதலாவது போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி 44ஓட்டங்களால் நியூசி



லாந்து அணியை வெற்றிபெற்று கிரிக்கெற்றில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியுள்ளது.

நியூசிலாந்துக்கு சுற்றுப பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி, அப்போட்டிகளுக்கு முன்னதாக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 20:20 என்ற போட்டியின் முதற்போட்டியில் நியூசிலாந்தை எதிர்த்து விளையாடியது.

இரு அணிகளுக்கும் தலா 20 ஓவர்கள் மட்டுமே வழங்கப்பட்ட இப்போட்டியில் அதிரடி ஆட்டத்தின் உச்சக்கட்டத்தைக் காண முடிந்தது.

ஒகலன்டில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில வெற்றிபெற்ற ஆஸி.அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 விக்கெற்றுக்களை இழந்து 214 ஓட்டங்களை எடுத்தது.

கில்கிறிஸ்ட்-1, கிளார்க்-7, சைமன்-32, மாட்டின்-3ஓட்டங்களை எடுத்தனர். இந்நிலையில் ஆஸி.அணி 4 விக்கெற்றுக்களை இழந்து 54 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது. இந்நிலையில் கேடிச் மற்றும் பொன்டிங் இருவரும் இணைந்து அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். கோடிச் 30ஓட்டங்களை எடுத்தார். பொன்டிங் 55பந்துகளில் 98 ஓட்டங்களை எடுத்தார். ஒரு ஓவரில் 3சிக்ஸர் உட்பட 30 ஓட்டங்களை அதிரடியாகக் குவித்து ரசிகர்களைப் பரவசப் படுத்தினார். பொன்டிங்கின் 98ஓட்டததில் 5 சிக்ஸரும் 8 பவுண்டரிகளும் அடங்கும். ஓட்டங்களை குறைவாக எடுத்தால் சதம் அடிக்கும் வாய்ப்பையும் இழந்தார். நியு,சிலாந்து அணி சார்பில் மில்ஸ் 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.


ஒருவருக்கு 10.7 ஓட்டங்களை சராசரியாக எடுக்க வேண்டிய நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, 20ஓவரில்



170 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. கான்பரோவிஸின் அதிரடிப் பந்துவீச்சில் திணறிய நியூசில்ாந்து அணியின் 4விக்கெற்றுக்களை அவர் வீழ்த்தினார். மக்ராத் 2விக்கெற்றுக்களை வீழ்த்தினார். நியூசிலாந்து அணி சார்பில் ஸ்டைரிஸ் ஆகக் கூடுதலாக 66 ஓட்டங்களை எடுத்தார்.

இதனால் 44 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி வென்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ரிக்கி பொன்டிங் தெரிவு செய்யப்பட்டார்.

முதல் ஒருநாள் போட்டி, முதல் டெஸ்ட் போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்ற ஆஸி



அணி, இப்புதிய வளாகப் போட்யின் முதல் போட்டியிலும் வெற்றி பெற்றமை விஷேட அம்சமாகும்.

3 மணி நேரம் மாத்திரமே நடைபெற்ற இப்போட்டியில் 384 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. ரசிகர்களிடையே அமோக வரவேற்பைப்பெற்ற இப்போட்



டியில் வீரர்களின் விளாசல் ஆட்டத்தைக்கண்டு ரசிக்க 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் திரண்டிருந்தனர்.(து-7)

# அகமதாபாத் நகரில் டெஸ்ட் போட்டி இல்லை

அகமதாபாத்தில் விளையாட மாட்டோம் என்ற பாகிஸ்தானின் மறுப்புககு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இந்திய கிரிக்கெற்சபை டெஸ்ட் போட்டிக்குப் பதிலாக ஒருநாள் போடடி ஒன்றை அகமதாபாத்தில் நடாத்த முடிவு செய்துள்ளது.

இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் பாகிஸ்தான் கிரிக்கெற்சபைத தலைவர் ஷகாரியார் கானுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

புதிய திட்டப்படி அகமதாபாத்தில் நடைபெறவிருந்த டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில் நடைபெறும். 5 போடடிகள கொண்ட ஒருநாளில் தொடா 6போடடிகள் கொண்டதாக அமையும். கடைசி ஒருநாள் போட்டி அகமதாபாத்தில் நடைபெறும்.

இத்திட்டத்திற்கு பாகிஸ்தான் சம்மதித்தால் பாகிஸ்தானின் சுற்றப பயணத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். (து-7)

## விளையாட்டு செய்திகள்

# ராவல்பிண்டி எக்ஸ்பிரஸிற்கு 500 டொலர்கள் அபராதம்

பாகிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளர் 'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' சொகைப் அக்தாருக்கு 500 டொலர் அபராதம் பாகிஸ்தான் கிரிக்கெற்சபையின் ஒழுங்கு நடவடிக்கைக்குழுவால் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த அவுஸ்திரேலிய சுற்றுத தொடரின் போது, 'சிட்னியல் இரவுக் கேளிக்கை விடுதிகளுககுச் சென்றது, ஊடகஙகளுக்குத் தன்னிச்சையாகப பேட்டி அளித்தது, பயிற்சியாளா கிராண்ட கம்டனிடம் அறிக்கை அளிக்காதது, ஆறு நாட்கள் தாமதமாகப் பாகிஸ்தான் திரும்பியது ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்கள் சொகைப் அக்தார்மீது சுமத்தப்பட்டிருந்தன.

இக்குற்றச்சாட்டுக்கள் தொடாபாக நீதிபதி அமீஆலம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெற்சபையின் ஒழுங்கு நடவடிககைக்குழு விசாரணை நடாத்தியதை அடுத்தே அக்தாருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

3 குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டபோதும் 6 நாட்கள் தாமதமாக பாகிஸதானுக்குத் திரும்பிய குற்றச் சாட்டிறகாகவே அபராதம் விதிக்கப்பட்டது.

அணிக்கான நடத்தை விதிகளை அக்தார் பெரிதாக எடுத்துக்கொள்வதற்கு கடும் கண்டனம் தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெற் சபை சட்ட ஆலோசகர் சையத் அஸ்கார் ஹைதர் அக்தார் தொடர்பான இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பட்டுவிட்டது. உடல் தகுதியை நிருபிக்கும் பட்சத்தில் அவர் இந்தியச் சுற்றுத்தொடரில் இடமபெறுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்றார். இத்துடன் அபராதம் விதிக்கப்பட்டதை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்ய முடியும் என்றும் சட்ட ஆலோசகர் ஹைதர் மேலும் தெரிவித்தார். (து-7)

# 'நெஞ்சு கனக்கும் நினைவுகள்' கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

தேசவிடிவிற்காய் தமது இன்னுயிரை அர்ப்பணமாக்கிய மாவீரர்களின் உணர்வுகளை சுமந்து நிற்கும் "நெஞ்சு கனக்கும் நினைவுகள்" என்னும் யாழ். பல்கலை மாணவர்களால் எழுதபபட்டு தமிழ மாணவர் ஒன்றியத்தினால் தொகுககப்பட்டு கடந்த மாவீரர் தினததை ஒட்டி திருமையில் வெளியடப்பட்ட கவிதைத் தொகுப்பு நூலின் அறிமுக விழா யாழ்.பல்கலைக்கழக கைலாபதி கலையரங்கில் இன்று சனிக்கிழமை காலை 10.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ப.குணேந்திரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில், தலைமையுரையை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செ.செல்வகுமார் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து, வாழ்த்துரையை பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் சிறப்புரையை யாழ். பல்கலைககழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும், தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.


தொடர்ந்து அறிமுகவுரையை ''வெளிச்சம்'' சஞ்சிகையின் ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்துவார். தொடர்ந்து பேராசிரியர் சு.மோகனதாஸ் கவிதைத் தொகுப்பை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை யாழ்.நல்லூர் கோட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத் தலைவர் சரா. புவனேஸ்வரன் பெற்றக் கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதி வழங்கல் இடம்பெறும். கவிதைத் தொகுப்பின் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் பொன்.பூலோகசிங்கமும் பிரபல விமர்சகர் ஐ.சாந்தனும் நிகழ்த்தவுள்ளனர்.

இந் நிகழ்வின் கலைநிகழ்வாக சிறப்புக் கவியரங்கும் இடம்பெறவுள்ளது. நிகழ்வின் இறுதியாக நன்றியுரையினை தமிழ் மாணவர் ஒன்றியச் செயலாளர் வி.அர்சுனா நிகழ்த்துவார். இந் நிகழ்வில் கவியார்வலர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ற)







வெலிகந்த படுகொலைகளைக் கண்டித்தும், அரசின் நிவாரண ஒதுக்கீடுகள் வடபகுதிக்குப் புறக்கணிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வலிகாமம் விவசாய சம்மேளனம் யாழ்.நகரில் நேற்று நடத்திய பேரணிக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஞா.ஐங்கரன்)

## ஹோட்டலில் கைகலப்பில் ஈடுபட்ட

# விமானப்படை அதிகாரிகள் நால்வர் கல்கிசை பொலிஸாரால் கைது

(கல்கிசை)

கல்கிசைப் பகுதியிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் ஊழியர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டு உடைமைகளை சேதப் படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விமானப்படை அதிகாரிகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற மேற்படி கைகலப்பில் நான்கு விமானப்படை அதிகாரிகளும் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் குறித்து கல்கிசை பிராந்தியப் பொலிஸ அத்தியட்சகர் கே.அரசரட்ணம் கூறியதாவது,

இரத்மலானை விமான நிலையத்தின் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் குறிப்பிட்ட ஹோட்டலுக்கு இரவு உணவுக்காக வந்துள்ளனர்.

அங்கு கடற்கரை அருகே உள்ள ஹோட்டல் கதிரைகளில் இருந்தபடி மதுபானம் அருந்தியுள்ளனர். இரவு 11.30 மணி வரை விமானப் படை அதிகாரிகள அங்கு மது அருந்திக்கொண்டு குதூகலமாக இருந்துள்ளனர்.

ஹோட்டல் ஊழியர்கள் ஹோட்டலை மூடும் நேரம் நெருங்கியதால் கதிரைகளை அப்புறப் படுதத வேண்டும் என்று கூறி அவரகளை எழுந்து செல்லுமாறு கூறியுள்ளனர்.

இதனையடுத்தே இருசாராருக்கும் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இக்கைலப்பில் விமானப் படை அதிகாரிகள் நால்வரும் காயமடைந்துள்ளனர். இதன் பின்பு இவர்கள் முகாமுக்குச் சென்று தமது ஏனைய சகாக்களுடன் மீண்டும் ஹோட்ட லுக்கு வந்து ஹோட்டல் உடைமைகளை சேதப்படுத்தியுள்ளனர்.


கைது செய்யப்பட்ட நால்வரும் புதன்கிழமை கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். மார்ச் மாதம் 2ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் இவர்களை ஆஜர் ஆகும்படி நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ற)

# இத்தாலியில் இடம்பெற்ற நினைவு கூறல் நிகழ்வு

படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல கௌசலயன் உட்பட அவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட ஏனைய போராளிகளையும், நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு அரியநாயகம் ஆகியோரையும் நினைவுகூர்ந்து இத்தாலி கத்தானியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீர வணக்க நிகழ்வு நடத்தப்பட்டன.

அத்துடன் சுனாமி ஆழிப்போரலை அனர்த்தத்தில் இறந்து போனவர்களின் 45ம் நாள் நினைவு நிகழ்வும் நடைபெற்றன. இதில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்களுடன் இத்தாலிய மக்களும் கலந்து கொண்டதுடன, பலர் நினைவுரையாற்றியும் இருந்தனர். (ற)






## மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் அதிபர் இ.ராஜேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகப் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளருமான கே.ஏரம்பமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (ப-9)

# புளொட் உறுப்பினர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(வவுனியா)

புளொட இயக்க உறுப்பினர் பயணம் செய்த வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 8.20 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் படுகாயமுற்ற பிரஸ்தாப உறுப்பினர் வவுனியா பொது மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவிலிருந்து மதவாச்சி நோக்கிச் சென்று கொணடிருந்த எல்ப் ட்றக் வாகனத்தை செலுத்திச் சென்ற மேற்படி நபர் மீது வானொன்றில் பின்னால் வந்தவர்களே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக விசாரணையின்போது தெரியவந்ததாக வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

பூவோயா பாலத்திற்கு அருகாமையில் வைத்தே இத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட வான் தப்பிச் சென்று விட்டதாகவும பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

காயமடைந்த மேற்படி நபர் உடனடியாகவே வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சத்திர சிகிச்சை வழங்கப்பட்டதாக வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்தார். (ற)

# இலவச ஆங்கில வகுப்பு

(கொழும்பு)

தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் நேற்றுமுன்தினம் இலவச ஆங்கில வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தரம் 1 தொடக்கம் தரம் 5ற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு இவ் ஆங்கில வகுப்பு நடாத்தப்படவுள்ளது.

இதன் ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் தமிழ் மாணவர் ஒன்றியத்தில், தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் குனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இவ் இலசவ ஆங்கில வகுப்பில் கல்வி கற்பதற்கு 100 சிறுவர்கள் பதிவுசெய்துள்ளார்கள்.

இச் சிறுவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு அவுஸ்திரேலியாவில் இருந்து திருமதி ஜெயசுபா ஒப்பந்த அடிப்படையில் தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் வரவழைக்கப்பட்டுள்ளார்.

இவ் வகுப்புக்குத் தேவையான சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நவீன கற்றல் உபகரணங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ற-19)

ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின் - குறள்

வலம்புரி

# அரசின் போக்கை ஐ.நா. உடன் அறியுமா?

விடுதலைப்புலிகளின் மட்டு .அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் இனந்தெரியாதோரால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனான் கண்டித்திருந்தார்.

யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருக்கும் போது இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளின் மட்டு.அம்பாறைமாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டமையானது சமாதான முயற்சிகளை பாதிக்கக்கூடியது.

இந்த உண்மையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் உட்பட உலகநாடுகள் உணர்ந்திருந்தன. இதேவேளை கௌசல்யனின் கொலையை இலங்கை அரசும் கண்டித்திருந்தது. இலங்கை அரசின் இக்கண்டனமானது தமிழ்மக்களுக்கு பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இருகாறும் இனவாத சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த அரசு, ஜே.வி.பியின் கட்டுக்குள் அகப்பட்டு மீளமுடியாமல் இருந்த நிலையில் கௌசல்யனின் கொலையை கண்டித்திருப்பதானது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆச்சரியமானதே இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்து கௌசல்யனும் அவருடன் சென்ற மேலும் ஐந்து பேரும் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு அரசு உண்மையிலேயே வருந்துகின்றது. அதன்காரணமாகவே அரசு தனது கண்டனத்தை தார்மீகப் பொறுப்புடன் தெரிவித்துள்ளதென தமிழ்மக்கள் கருதினர்.

இது ஒரு புறமிருக்க, இலங்கை அரசின் கண்டனத்தை உலகநாடுகளும் நம்பியிருக்கும்.

அதாவது கௌசல்யன் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமையால் சமாதான முயற்சி -யுத்தநிறுத்தமும் குழம்பிப்போய்விடுமோ என்று அரசு கவலை கொண்டுள்ளது. அதன்காரணமாகவே உடனடியாக தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது- இவ்வாறு உலகநாடுகள் அனுமானித்தன.

இதேநேரம் சுனாமியனர்த்தம் ஏற்படுத்திய அழிவுகளை நேரில்பார்வையிடுவதற்காக இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகளின் செயலாளர் கொபி அனான் விடுதலைப்புலிகளின் போராட்டத்தை அவர்களின் சமாதான விருப்பத்தை அறிந்துகொண்டார்.

தமிழ் மக்களை இலங்கை அரசு எந்தளவு தூரம் புறக்கணிக்கின்றது என்பதை அவர் புரிந்துகொள்வதற்கு இலங்கை விஜயம் பேருதவியாக அமைந்தது.

அதாவது சுனாமியினால் ஏற்பட்ட அழிவுகளை பார்வையிடுவதற்காக இலங்கைக்கு வருகை தந்த தம்மை தமிழர்தாயகம் என்ற ஒரேகாரணத்திற்காக அங்கு சுனாமி ஏற்படுத்திய அழிவுகளை பார்வையிடுவதற்கு அரசுதடைவிதித்தது.

இதிலிருந்து இலங்கை அரசு தமிழ்மக்களை எவ்வாறு நோக்குகின்றது என்பதை கொபிஅனான் புரிந்து கொண்டார்.

விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்திருந்த போதிலும் அதனை இலங்கை அரசு மதிக்கவில்லை என்பதை உள்ளார்த்தமாக ஏற்றுக்கொண்ட கொபி அனான், கௌசல்யனின் கொலை விவகாரம் உண்மையிலேயே பாதித்திருக்குமெனக் கருதினார் அதனால் அவர் தனது தார்மீகப்பொறுப்பை செவ்வனே செய்தார்.

ஆனால் அதற்கு இலங்கை அரசு கண்டனம் தெரிவிக்கின்றதெனில் அரசின்போக்கை ஐக்கிய நாடுகள் புரிந்துகொள்ளலாம் அல்லவா.?

# மீள்கட்டுமானக் கட்டமைப்பில் புலிகளையும் இணைக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்குக!

## சுவீடன் அமைச்சரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் ஹரின் ஜெம்றினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக வடக்கு-கிழக்கு மாகாணமே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது என்றும் உலகவங்கி ,ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அறிக்கைகளின் படி ஏறத்தாழ 71 சதவீதமான அழிவுகள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் தான் ஏற்பட்டுள்ளது எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இச்சந்திப்பின் போது ஹரின் ஜெம்றினிடம் சுட்டிக் காட்டினர்.

நிவாரணம் மற்றும் புனரமைப்பு, மீளகுடியேற்றம் போன்றவற்ற்றை அப்பகுதியில் மேற்கொள்வதற்காக புதிய கட்டமைபபு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து சுவீடன நாட்டு அபிவிருத்தி அமைச்சரிடம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துக்கூறினர்.

அத்துடன், அந்தக் கட்டமைப்பில விடுதலைப்புலிகள் இணைக்கப்படுவதோடு விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் சேர்ந்து மீள்கட்டமைப்புப் பணிகளை முழுமையாக அமுலபடுத்த நடவடிக்கை மேற்கொள்வதற்காக அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் ஹரிம் ஜெமறினிடம் கேட்டுக்கொண்டனர். (ற-4)

# உரையால் தொடரும் சர்ச்சை! குட்டையை குழப்பும் ஜே.வி.பி

(கொழும்பு)

ஜே.வி.பி தொடர்பில் நிக்கம்புவ கூட்டத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் எல்லா வகையான கருத்துக்களை வெளிப்படுத்துவது என்பது தொடர்பில் ஜே.வி.பியினர் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட அரசியல் கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்க விரும்பாவிட்டால் விலகிச் செல்லலாம் என ஜனாதிபதி ஜே.வி.பி குறித்து மறைமுகமாக தனது கருத்தினை அவ்வுரையில் வெளிப்படுத்தியிருந்தார்.

ஜனாதிபதியின் இக் கருத்துக் குறித்து ஜே.வி.பியினர் உடனடியாக பதிலளிக்கும் அறிக்கை ஒன்றினை வெளியிட முற்பட்ட போதிலும் சில முக்கியஸ்தர்களின் தலையீட்டினால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது.

இதனையடுத்து, ஜனாதிபதி செயலகம் ஊடகங்கள் தவறான முறையில் ஜனாதிபதியின் கருத்தினை திரிவுபடுத்தி வெளியிட்டதாகத் தெரிவித்து அறிக்கையொன்றினையும் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் ஜே.வி.பி தரப்பு அமைதியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஜனாதிபதியின் அறிவப்புக் குறித்து அது கடும் விசனம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ற-4)

# இலங்கை போக்குவரத்துச் சபையை மீளமைக்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையை மீள அமைப்பதற்கான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதற்கான சட்டவரைபுகள் தற்போது ஆராயப்பட்டு வருவதாக மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் ஐ.எஸ்.ஜெயரட்ண தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபை மீளமைக்கப்படும் வேளையில் அதில் பணிபுரியும் ஊழியர்கள் தமது விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்கேற்ற வழிவகைகளும் வகுககப்பட்டு வருவதாக போக்குவரத்துச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

அவ்வாறு ஓய்வு பெறும் ஊழியர்க்ளுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. எவ்வாறான தொகை நஷ்டஈடாக வழங்கப்படும் என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

11 கொத்தனி பஸ் கம்பனிகள் 38 ஆயிரம் தொழிலாளர்களைக் கொண்டிருக்கின்றது. எனினும் இலங்கை முழுவதும் 4 ஆயிரம் பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

மேலதிகமாக ஊழியர்கள் இருப்பதினால் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்த முடியாமல் இருக்கின்றது.

இதன் காரணமாகவே விருப்பத்தின் பேரில் ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்படவிருப்பதாக போக்குவரத்துச் சபைத் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையை மீண்டும் உருவாக்குவது மற்றும் விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவது ஆகியவற்றுக்கான சட்டவரைப்புகளை உருவாக்கும் பணிகளை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்வதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் போக்குவரத்துச் சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ற-9)

# அடுத்த ஆண்டு முதல் சுதேச மருத்துவமும் பாடத் திட்டங்களில் உள்ளடக்கப்படும்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அறிவிப்பு

(கொழும்பு)

சுதேச வைத்தியத்துறை தொடர்பான விடயங்களை பாடசாலை பாடவிதானங்களில் சேர்க்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அடுத்த வருடம் முதல் தரம் 6ற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சுதேச மருத்துவம் சம்பந்தமான விடயங்கள் போதிக்கப்படுமென சுதேச மருத்துவத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தகவல்கள் அடங்கிய யோசனைகள கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தென் பகுதியிலுள்ள பௌத்த வணக்க ஸ்தலமொன்றில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

அறநெறிப் பாடசாலைகளில் சுதேச மருத்துவ அமைப்புக்களை ஸ்தாபிக்கும் திட்டங்களையும் அமைச்சர் ஆரம்பித்து வைத்தார். தென்மாகாணத்தில் சுனாமியால் பாதிக்கபபட்ட ஆயுர்வேத மருந்தகங்களையும் ஆயுர்வேத மருத்துவ மனைகளையும மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சிக்கான நிதியுதவிகளையும் அமைச்சர் வழங்கியுள்ளார். (ற-7)

# இங்கிலாந்து மற்றும் ஒஸ்ரியா நாடுகள் இலங்கைக்கு 140 பஸ்களை வழங்கும்

(கொழும்பு)

இங்கிலாந்தும் ஒஸ்ரியாவும் இலங்கையின் மத்திய போக்குவரத்துச் சபைக்கு 140 பஸ் வண்டிகளை நன்கொடையாக வழங்கவுள்ளன.

இங்கிலாந்தைச் சேர்ந்த இஸ்லாமிய நிவாரண ஸ்தாபனம் 100 பஸ்வண்டிகளையும், ஒஸ்ரிய அரசாங்கம் 40 பஸ்வண்டிகளையும் நன்கொடையாக வழங்கவுள்ளன.

ஒஸ்ரியா வழங்கும் பஸ் வண்டிகளில் 5 வண்டிகள் இரடடை அடுக்குபஸ்களாகும். இவை அடுதத மாத இறுதியில் இலங்கையை வந்தடையுமென மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் கலாநிதி ஐ.எஸ்.ஜயவர்த்தனா தெரிவித்தார்.

இவை சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பயணிகள் போக்குவரத்துச் சேவைக்காக ஈடுபடுத்தப்படவுள்ளன. (ற-7)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

வாழ்க்கையின் இலட்சியம் என்ன? இந்த உலகம் தான் வாழ்க்கையின் இலட்சியமா? வேறு ஒன்றும் இல்லையா? நாம் இப்போது இருப்பது போல்தான் இருக்க வேண்டுமா? இதற்கு மேலாக இருக்க வேண்டாமா? எந்தத் தடையும் இல்லாமல் ஓடுகின்ற ஒரு எந்திரமாக இருக்க வேண்டியவன் தானா மனிதன்?

சுவாமி விவேகானந்தர்

# சுருக்கெழுத்து தட்டச்சு பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விபரம்

கொக்குவில் இந்துக்கல்லூரியில் முறைசாராக் கல்விப்பிரிவினால் 2004 ஆம் ஆண்டில் நாடாத்தப்பட்ட தொழில்திறன் பயிற்சி சுருக்கெழுத்து, தட்டச்சு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரத்தினை அதிபர் அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் சிதிதயடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு.

ஜலஜா - யோகராசா, ஜெயகௌரி - இராஜரட்னம், ஜெயமதி - புவனேஸ்வரன், சுரேந்தினி - கருணாகரன், ஜசோதரா - சதாசிவம், சயந்தா -நாகலிங்கம், புயீலா-கோவிந்தராஜன், சிந்தியா - அரியராஜா, ரவீந்திரன் - ஸ்ரீரமணன், புஸ்பலதா - கோபால சிங்கம், தமிழ்ப்பிரியா - கோவிந்தபிள்ளை, வசந்திரா - கமலநாதன், குமுதினி-பொன்னுத்துரை. (ற)

## யாழ்ப்பாணத்தில்...

பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட்டோர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை அரசு உடனடியாக ஆரம்பித்து அதனுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு நிவாரண உதவிகள் உரியமுறையில் வந்து சேரவில்லை. இவற்றைக் கண்டித்து இக் கண்டனப் பேரணி நடாத்தப் படவுள்ளது.

நல்லூர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகும் பேரணி கண்காணிப்புக் குழு அலுவலகத்தைசென்றடைந்து அங்கு கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்படும்.

பின்னர் அங்கிருந்து யாழ். செயலகத்தைச் சென்றடைந்து யாழ். அரச அதிபர் கே. கணேஸிடமும் ஜனாதி பதிக்கான மகஜர் கையளிக்கப்பட ஏற்பாடு செய்யப்படுகின்றது. (ச-19)

## வுஊறிச்...

நடவடிக்கைகளுக்கு உந்துசக்தியாக அமையும் என்று அமெரிக்கத் தூதுவரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-04)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

தலைவர் இ. ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் மு. சுந்தரலிங்கம் மூதன்மை விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வணிகர் கழகத் தலைவர் இ. ஜெயசேகரம் யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் அ. சுதாஸ் ஆகியோர் கலந்துகொள்ள்வுள்னர். (ச)

## யாழ்ப்பாணத்தில் நேற்று...

அசமந்தப் போக்கைக் கண்டித்துமே இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

நல்லூர்ப் பின் வீதியிலிருந்து ஆரம்பமான இந்தப் பேரணி கண்காணிப்புக் குழு அலுவலகத்தைச் சென்றடைந்து அங்கு வலிகாம விவசாய சம்மேளனத் தலைவர் கந்தசாமியினால், கண்காணிப்புக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப் பட்டது. இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.(ச-19)

# இலங்கை அமைதி முயற்சியில்...

இலங்கையின் சமாதான முயற்சியில் தொடர்ந்தும் தேக்க நிலையும் இழுபறியும் முடிவொன்றுக்கு வரமுடியாமையும் தொடரும் நிலையில், நிரந்தரத் தீர்வொன்றை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து, ஐ.நாவுக்கு ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் ஐ.நா. சபை தனது எதிர்கால திட்டத்தை இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்வொன்றுக்கும் இரு தரப்பையும் கொண்டு வரும் பாரிய அமைதி முயற்சியில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டமைக்கு ஐ.நா. சபை கண்டனம் வெளியிட்டமை, ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் ஐ.நா. கொண்டுள்ள கரிசனையையும், புலிகள் அமைப்பின்மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாகவும் இது தமிழ் மக்களின் போராட்டத்துக்கு சர்வதேச அங்கீகாரமாக அமைவதாகவும் அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இத்தகைய நிலைமை இலங்கையின் அமைதி முயற்சியில் ஐ.நாவின் தலையீடு நெருங்கிவிட்டதையே உணர்த்துவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (இ)

## புலிகளின்...

புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகுமாரன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, நீதி நிர்வாகத்துறைப் பொறுபாளர் பரா, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஆகியோரை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கள், அரசியல்துறை நடுவப் பணியகத்தின் நிர்வாக பொறுப்பாளர் மதன் ராஜ், நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன், மருத்துவப் பிரிவைச் சேர்ந்த ரேகா ஆகியோர் வரவேற்றனர். (இ)

## புலிகளின் மன்னார்...

சேதமடைந்துள்ளது. அரசியல்துறை செயலக பெயர்ப்பலகை அடித்து நொறுக்கப்பட்டது. அலுவலகத்தினுள் இருந்து கோப்புக்கள் தூக்கிவீசப்பட்டதுடன் அங்கிருந்த தளபாடங்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. (ச)

## அரசுக்கு...

ரீதியான பாகுபாடுகளையும் பாரபட்சங்களையும் அரசாங்கம் கைவிடவேண்டும். எமது வாழ்விடங்கள் பற்றிய அடையாளங்களை துடைத்தெறியும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளும முன்வைக்கபபட்டன. பள்ளிவாசலில் நண்பகல் ஜும்மா தொழுகையை முடித்த பின்பு முஸ்லிம்கள் ஒன்றுகூடி அங்கிருந்து பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து அதற்கு முன்பாக நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

## இலட்சியப்...

எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை நேற்று முற்பகல் திருகோணமலை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. முஸ்லிம் பிரதிநிதிகள் மத்தியில் கருத்து தெரிவித்த சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் உறவு ரீதியாக இணைந்து செயற்படுவதன் மூலமே ஒட்டுமொத்தத் தமிழினத்தின் இலக்கை அடையமுடியும் என்றும் தெரிவித்தார்.

அரசின் ஏமாற்று நடவடிக்கைகளை தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அரசின் ஏமாற்று நடவடிக்கைகள் இனிமேலும் தொடரும் பட்சத்தில் நாம் எமது இலட்சியத்தை நோக்கிய பாதையை முன்னெடுப்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## எரிக்சொல்ஹெய்ம்...

22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள வைபவத்திலும் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி, மாத்தறை, அம்பாறை, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார்.

தனது பயணத்தை முடித்துக் கொண்டு எரிக்சொல்ஹெய்ம் இம் மாதம் 28 ஆம் திகதி நோர்வே விஜயம் செய்வார் என தூதராலயம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.(இ-04)


ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்

HATTON NATIONAL BANK LIMITED

அடகுப் பொருட்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளையில் அடகு சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒருவருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகிறோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்தமுடியாவிட்டால் கடனிற்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி கடனின் காலாவதித் திகதியினை நீடித்துக் கொள்ளலாம்.

ஒருவருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க/காலாவதி திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருட்கள் பங்குனி முதல் வாரத்தில் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.


ஏலத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

-முகாமையாளர்

(C-1089)



நிறைஞ்சனாஸ்
சங்கானை
ரஜனி, அம்பிகா, சத்தியராஜ் நடிப்பில்
நான் சிகப்பு மனிதன்


கா.நேரம்
11.00, 2.45, 6.00 (பு.நே)


மனோகரா யாழ்.
இளையதளபதி விஜய்,
ரவி கிருஷ்ணா, நதிஷா, ரம்பா
இயக்கம்: S.A. சந்திரசேகரன்





இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

நாதன்ஸ்
யாழ்ப்பாணம் (குளிரூட்டியது)
15.02.2005 முதல் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
காதல்
என்னும் திரை ஓவியம் திரையிடப் படவுள்ளது
தினசரி 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
டைட்டானிக் மறுஅறிவித்தல்வரை காண்பிக்கப்படமாட்டாது


10% முதல் 40% வரை
விலைக்கழிவில்:
பாடசாலை மாணவருக்கான
கறுப்பு, வெள்ளை சப்பாத்துக்கள்,
ஆண்கள், பெண்களுக்கான
பாதணிகள் மலிவுவிலையில்
கொள்வனவு செய்திட நாடுங்கள்!
DSI காட்சி அறை
426 ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம். T.P.6809

DSI SUPERSPORT
DSI RANPA
பாதணிகள்
மலிவு விற்பனை
SALE
SALE


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.